...தா விபரம்
—
...ஆண்டு ரூ 7,
,, 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணு

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 23-10-49 | இதழ் 17

ஓடெடுக்க வேண்டியதுதான்!

“வருமான இனங்களில் முக்கியமானவை எல்லாம் புது அரசியலில் இந்திய சர்க்காருக்கே போய்விடுவதால், மாகாணங்கள் இந்திய சர்க்காரிடம் பிச்சை கேட்கும் கதியையே அடைகின்றன.”

தினசரி
17—10—49

கடன் கேட்கிறார்

16-ம் பக்கத் தொடர்ச்சி

குப் பாடுபடும் ஃவர் உள்ளமும் பதைக்கும், இன்னபிற உற்பத்தித் தொழில் துறைகளில் மட்டுமின்றி, விவசாயத்துறையிலும் விளைய இடமிருந்தும், விளைவிக்க முடியாத, காட்டு நிலமாக இருப்பது, எல்லா மாகாணங்களையும் விட இங்கு தான் அதிகம். சில முக்கிய மாகாணங்களின் நிலையுடன், நம் மாகாண நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

பம்பாய் 58 %

ஐக்கிய மாகாணம் 52 %

வங்கம் 50 o/o

பஞ்சாப் 47 o/o

சென்னை 40 o/o

பொதுவாக, இந்தியாவின் சராசரி விளைச்சல் நிலம் 53 o/o என்றுமதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நம் மாகாணமோ, பிற மாகாணங்களைப் போல் அல்லாதது மட்டுமின்றி, சராசரி நிலைக்கும், மிக அதிக அளவில் தாழ்ந்ததாக—ஏழ்மையுடையதாக இருக்கிறது. நீர்ப்பாசன வசதியின்றிக்கிடக்கும் நிலம் எவ்வளவு அதிகமோ, அது போலவே மக்கள் நோகை அபிவிருத்தியும் நம் மாகாணத்தில் கவனத்தை இழுக்கும் வகையில் அதிகமாகி வருகிறது.

ஆகவே, மக்கள் வாழ்வதற்கு, ஜீவாதாரமான உணவு உற்பத்தியில் நமது மாகாணத்தின் நிலை எவ்வளவு அபாயகரமானதாக இருக்கிறதென்பது விளங்கும். இந்திய மண்ணுடன் ஒப்பிட்டால், நமது மாகாண மண் அவ்வளவு சோடையானதல்ல. வளம் நிரம்பியது, வேண்டியதை வழங்கக் கூடியது. ஆகவே, வளமிகுந்த நிலம் இருந்தும் வகையில்லாததால், உணவுப பிரச்னை, நம்மையும் வெகுவாகப் பாதிக்கிறது—திண்டாடச் செய்கிறது.

எனவேதான், இந்த நெருக்கடி தவிர்க்கவேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து, சென்னை சர்க்கார் பலகோடி ரூபாய்களில், பல நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்துள்ளனர். இராமபாதசாகர் அணைக்கட்டு, வைகைத்திட்டம், காவேரிப்பாசனம் போன்ற இந்த நீண்டகாலத் திட்டங்கள், உடனடியாகப் பலன் நல்கக் கூடியன அல்ல என்பதற்காக, இப்போது கவனிக்கவேண்டிய, உடனடித் திட்டங்கள் சிலவற்றையும் தயாரித்து, அதற்கு உதவுமாறு மத்திய சர்க்காரைக்கோரியுள்ளனர்-கடனுகக் கொடுத்துதவுமாறு கேட்டுள்ளனர். உணவு உற்பத்தியின் அவசியம் பற்றி ஓயாது பெருங் கூச்சலிட்டுவரும் வடநாட்டு இந்திய அரசாங்கமோ, சென்னையின் கோரிக்கையைச் செவி மடுக்காது, முன்பு அளித்துவந்த, உணவுப் பெருக்கத் திட்டமான்யத் தொகையிலும் ஒரு கோடி ரூபாயைக் குறைத்து இருக்கிறது.

* * *

இன்றியமையாத ஒரு திட்டத்துக்கென, மாகாண சர்க்கார் கடன் கேட்க மத்திய சர்க்காரோ 'இல்லை' யென்று கைவிரித்திருப்பதைக் காணும்பொழுது, 'பணம் இல்லை போலும், பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்?' என்றுதான் நினைக்கத் தோன்றும். அப்படி ஏழ்மை தாண்டவமாட, மத்திய சர்க்கார் இருப்பதாகவும் தென்படவில்லை, அது செய்து வரும் செலவுத் தொகைகளைப் பார்த்தால்.

நீர்ப்பாசன அபிவிருத்திக்கு மாகாண சர்க்கார் கேட்டது ஆறே ஆறு கோடி—அதுவும் கடனுக!

'இல்லை'யென்று மறுத்ததோடு உணவு உற்பத்தி உதவித் தொகையிலும் ஒரு கோடியைப் பிடித்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. 7 கோடி ரூபாய்களுக்கு இத்துணை சிக்கனம் காட்டும், மத்திய அரசாங்கம், பாதுகாப்புச் செலவுக்கெனச் செலவிடும் தொகை என்ன தெரியுமா? 157 கோடி ரூபாய்கள்! கிட்டத்தட்ட வருமனத்தில் பாதி தொகை!! பாதுகாப்பு என்ற பெயரால் ராணுவச் செலவை, அகிம்சாவாதிகளின், அரசாங்கம் செலவிடும்—தொகை வளர்ந்திருக்கும் பட்டியலைப் பாருங்கள்:

1939—40 — 50 கோடி

1948—49 — 157 கோடி

மூன்று மடங்குக்கு மேல் ராணுவச் செலவு வளர்ந்திருக்கிறது. அது மட்டுமல்ல, புது ராணுவக் கப்பல்கள் வாங்கவும், கப்பல் அதிகாரிகளுக்கு இருப்பிடங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

சங்கராச்சாரியார் சாவோலை

4-ம் பக்கத்தொடர்ச்சி

அந்த ராமநாமத்துக்கு, ஸ்ரீ ரெ
ஞதருக்கு இருக்கிறது என்று கூ
கிறார்.

இந்தச்செய்தியை இவ்வளவுவி
மாக "இரண்டுகலத்" தலைப்பு
கொடுத்துப் பிரசுரித்திருக்கிற
'பாரததேவி,' அதற்குப் பக்க
லேயே, அந்த அரங்கனுதரின் பெ
மையை விளக்கும் ஒரு செய்தி
யும் பிரசுரித்திருக்கிறது. செய்தி
குள் கூட நாம் போகவேண்டாம்
அதில் இருக்கும் 'தமிழ்' நம்மை
கலக்கிவிடும், ஆகவே தலைப்பை
டும் பாருங்கள்.

ஸ்ரீரங்கம் கோவில் பூட்டுடைப்புச் சம்பவம்! போலீஸ் விசாரணை விவரம்!

வாயைத் திறந்து சாகும்போ
'ராமா' என்று சொல்லாவிட்டாலு
சாகப்போகிறவர் காதில் விழும்
ஒருதடவை ராமநாமத்தை உச்சி
தாலேபோதும், அவன் பாபங்
மறைந்து, மோக்ஷலோகம் அனுப்
வைக்கப்பட்டுவிடுவான் என்று ச
கரர் சொல்லுகிறார். ஆனால் யாரோ
ஒரு 'சாமான்யன்' ஸ்ரீரங்கம் கோ
வில் புகுந்து, யாகசாலைக் கதவை
உடைத்து, அரங்கனுதர் பணப்பெ
டியை — உண்டியலைப் புரட்டிவிட்
ஒருவருக்கும் தெரியாமல் போயிரு
கிறான். அனவரதமும் 'அரங்கனு
அரங்கனுதா' என்று பஜித்து
கொண்டு சேவைசெய்யும் ஐந்துபே
காவல் காத்துக்கொண்டிருந்து!
அந்த 'பக்தசிரேஷ்டர்கள்' கண்ணி
படாமல், வெளியேறியிருக்கிறான்
சம்பவம் நடந்து பலநாட்கள் ஆ
யும் ஒருமுறை பஜித்ததுமே 'சாயு
சிய' பதவியளிக்கும் சக்தி வாய்ந்
'எம்பெருமான்' ஏனென்றுகூட க
வில்கேட்டதாகவோ, எடுத்தகள்ள
இன்னவன்என்று சொன்னதாகவோ
தெரியவில்லை — போலீசார் தா
புலன் விசாரணை செய்கின்றனரா

இப்படி வெளிப்படுகிறது அரங்
னுதர் மகத்துவம். ஆனால்சங்கரா
"புழுவுக்கு மகுடம்" செய்வி
றேன் என்கிறார், அதுமுடியுமென்
'சல்லடம்' கட்டுகிறார்.!!

*

சங்கராச்சாரியார் சாவோலை!

கங்கையின்மீது காதல்! மோட்சம் பெற வழி!

பாவி!
பஞ்சமாபாதகன்
படுகொலை செய்தவன்
பலரைக் கெடுத்தவன்
படுமோசக்காரன்
பார்த்தாலே 'பாபம்!'

ன்றெல்லாம் தூற்றப்படுபவர்கள்
க் கவலைப்பட வேண்டியதில்லை,
ர்களுக்கெல்லாம் 'விடிமோட்
வந்துவிட்டது, வீணைகப்
த்தைக் கழிக்க கோயிலென்
கும்பாபிஷேகம் என்றும் இனிப்
த்தைக் கொட்டிக் கொண்டி
வேண்டாம்! வாழ்நாளை வீணுக்
னே, நினைக்கவும் கூசும் கொடு
ளைச்செய்து,ஊரார் தூற்றப்பாப
டையைக் கட்டிக் கொண்
ன, பரமாத்மா, இந்தப்பாபியை
ப்பாயா, நரகவேதனையில்லா
செய்வாயா நமசிவாயா, நாரா
, என்றெல்லாம் இனி ஏங்க
டியதில்லை, ஏழ்பிறப்பெடுத்து
ன்' உழலத்தான் வேண்டுமா
று எண்ணுவதெல்லாம் எண்ணி
புண்ணாக வேண்டியதில்லை,
சிக்காலத்திலாவது 'கழுவாய்'
க்கொள்வோம், புண்யம் சம்பா
பாம் என்று புண்யதீர்த்தம்
வேண்டிய அவசியமோ, அந்திய
த்தில் ஆயாசமோ வேண்டிய
, அவ்வளவு எளிதில் 'பாப
டை'யைக் கழுவிவிட்டு, பரந்
னடியைச் சேர்ந்து மோக்ஷசாம்
த்தில், மறுஜென்ம பயமின்றி,
லாம்!

ஒரு உத்தரணி ஜலம்!
கொஞ்சம் துளசி அல்லது
பூதி!

ஒருமுறை இராமா அல்லது
வா!

துபோதும், நேராக மோட்ச
ராஜ்யந்தான், தங்குதடையில்லை,
ஷயில்லை!

மோட்சம் பெறும் பாதையை இவ்வளவு எளிதாக இப்போதுதான், 'பாபாத்மாக்களாய்' இகஈகதுக்கங்களில்கிடந்து உழலும் ஜீவன்களுக்குத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் 'ஜகத்குரு!'

முன்பெல்லாம் இரத, கஜ, துரக பதாதிகளுடன், ஒட்டகம் முன் செல்ல பின்னால் இராண்டு யானைகள் வர, அதைத்தொடர்ந்து குதிரைகள் வர, கடைசியில் வெள்ளிப்பல்லக்கில், பக்கத்தில் பாராயணம் நடக்க, ஏழைகள் தோளில் சுமந்துசெல்ல, இந்த 'உலக ஆசை'யை வெறுத்து, பவனி வருவாரே, காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார், அவருக்கு இப்போது இந்த 'ஜகத்'தில் முன்போல நடமாட இடமில்லாததால்தானே, என்னவோ, கும்பகோணத்திலிருந்தபடியே, இது போன்ற, இலகுவான, உன்னதமான போதனைகளைத் திருவாய் மலர்ந்தருளத் துவங்கியிருக்கிறார்! 'ஜகத்'ரட்சகர் என்பதுபோல, ஜகத்குருபாருங்கள், ஆகவே பாபாத்மாக்களை இரட்சிக்க இப்போது, மோட்சத்துக்குப் போகும் இலகுவான வழியைக் காட்டியுள்ளார்! இந்த வழியை 'ஒருஞாயிறு பூராவும்தனது சிஷ்ய கோடிகளுக்கு, தவிர்க்கமுடியாத ஆஞ்ஞையாகக் கட்டளை'யிட்டாராம்! 'பாரததேவி' சொல்கிறது! சோஷியலிசம் பேசிக்கொண்டு தமிழில் உலவுகிறதே சென்னை மவுண்ட்ரோடிலிருந்து புறப்பட்டு' 'பாரத தேவி'! அதுதான், ஆச்சார்யசாமிகளின் இந்த 'ஆஞ்ஞையாகக்கட்டளை'யை அறிவிக்கிறது! இந்த இகலோகத்தில் உழலும் 'சாமான்யர்கள்' தன்யர்களாகி மோக்ஷசாம்ராஜ்யத்தைக் காணவாவது, வழி செய்வோமே என்ற ஆசை போலும்!!

கும்பகோணம் அக் 13, என்று தேதியிட்டு அதுதரும் சங்கராச்சாரியார் உபதேசம் இது:

"ஹிந்துக்களாகிய நாம் பிராமணரோ ஹரிஜனனோ மற்ற எந்த வகுப்பைச் சேர்ந்தவராயினும் பாதுகாப்பிலோ சமூகத்திலோ இறந்து போகும் தருவாயில் இருக்கும் ஒரு ஜீவனுக்கு நற்கெதிகிடைக்கும் பொருட்டு அந்த ஜீவனுடைய காதில் நன்றாகப் பதியும்படியாக சிவநாமத்தையோ, ராம நாமாவையோ ஒரு தடவையாவது உரக்கச் சொல்லி கங்கையிலிருந்து வரவழைத்த தீர்த்தத்தைச் சைவர்களாயிருந்தால் விபூதியில் கரைத்தும் வைணவர்களாயிருந்தால் துளசியைப் பொடி செய்து கரைத்தும் ஒரு உத்தரணி வாயில் ஊற்றிவிட்டால் மோக்ஷ சந்தானத்தைப்பெறுவதோடு மறுஜன்மம் இல்லையென்பது சாஸ்திரமான படியால்......"

போதுமா! இதுதான், ஒரு கரண்டி கங்கைநீர், கொஞ்சம் துளசி அல்லது திருநீறு! அதைச், சாகும்நிலையிலிருக்கும் 'ஜீவன்' வாயில் ஊற்றி, ஊற்றுபவர் ஒருமுறை 'சிவா' அல்லது 'ராமா' என்று கூறிவிட்டாலே போதுமாம்! சாகும் 'ஜீவன்' கூட அதைச் சொல்லவேண்டாம், அருகிலிருப்பவர் சொல்லிவிட்டாலே, அந்த உயிர்—வாழ்நாளில் எத்தகைய கொடுமைகளைச் செய்திருந்தாலும் — மோக்ஷ சந்தானப் பிராப்தி அடைந்து விடுமாம்!

இத்துடன் நின்றுவிடவில்லை ஆச்சாரியஸ்வாமிகளின் கருணைகடாட்சம்! ஆரம்பிக்கும்பொழுதே பிராமணர் என்றும் ஹரிஜனன் என்றும் துவங்கும் அவர், செத்தபின் 'சமரசம்' தோன்ற வேண்டியது பற்றியும் உபதேசித்துள்ளார்!

"அனாதையான ஒரு புருஷனோ, ஒரு ஸ்திரியோ, ஆற்றிலோ, வழிநடைப் பிரயாணத்திலோ, ஆஸ்பத்திரியிலோ, சிறைச்சாலையிலோ, வேறு ஆதாரமின்றி இறந்து போகும் பிரேதத்தை எந்தக் குலமாயிருந்தாலும் எந்தச் சமயத்தினராயிருந்தாலும் அவர்களுடைய மத அனுஷ்டானப்படி சடங்குகளை நாமே கூட இருந்து ஆரிய கைங்கர்யமாக்களைச் செய்துவிட வேண்டும்"

இப்படிப்பட்ட சமரச சன்மார்க்க சித்தாந்தத்தை யாராவது சொன்னதுண்டா? பாருங்கள்! ...

பிணத்துக்குப் பூஜை!
புழுவுக்கு மகுடம்!
சாகும்காலத்தில் 'சங்கரா!'

பிரேதம் ஆன பிறகு, அந்த உயிருக்கு, ஆச்சார அனுஷ்டானங்களைச் செய்வித்து அந்த 'ஜீவனை' உய்விக்கும் அருள் சுரந்து அதுவும் சாதி சமயம் கூடப் பார்க்காமல் செய்ய வேண்டும் என்று சமரசம் வேறு போதித்துள்ளார்!

சாகும் உயிருக்கு சன்மார்க்கம், பிரேதத்திடம் பேதமின்மை ஆகிய சத்கைங்கர்யங்களைச் செய்வதில் மட்டும் அவரது ஆன்மா சாந்தியடைந்து விடவில்லை — என்ன இருந்தாலும் ஜகத்குரு அதிலும் காமகோடி பாருங்கள்! — இன்னும் 'உலகத்தை உய்விக்க' கருணை பாலித்துள்ளார், தன் சிஷ்யகோடிகளுக்கு 'ஆக்ஞை' பிறப்பித்துள்ளார்!

"ஆதலால் சிஷ்யர்களாகிய நீங்கள் இம்மாதிரி கைங்கர்யங்களில் ஈடுபடுவது மட்டுமின்றி ஊர்களிலும், கிராமங்களிலும் வீட்டுக்குஒருவராக மெம்பர்களைப் பொறுக்கி ஸ்ரீமடத்துக்குத் தெரிவித்தால் அவர்களுக்கு மடத்திலிருந்து கங்காஜலம் வரவழைத்து அனுப்பப்படும்"

பாவிகளை, பரமண்டலத்திற்கு நேராகப் பரந்தாமன் அடிகளுக்கு அனுப்பிவைக்க முயற்சிக்கும்போது "கங்காஜலம்" கிடைக்காவிட்டால், என்ன செய்வது? ஆகவே, அந்த அவலத்தையும் போக்கவேண்டும் என்ற 'கிருபை'யின் காரணமாக 'கங்காஜலம் வரவழைத்துத் தருகிறேன், சிஷ்யர்களே! அஞ்சாதீர்கள்!!" என்றும் அபயம் அளித்துள்ளார்! இந்த உத்தம சேவையின் உயரிய இலட்சணம் பற்றி கூறவந்த போது, தற்போதைய கவர்னர் ஜெனரல் இராசகோபாலாச்சாரியாரின் மூதாதையான நல்லான் சக்கரவர்த்தி என்பவர் ஒரு அனாதைப் பிரேதத்தை அடக்கம் செய்வித்தாரென்றும், அதுகண்டு ஸ்ரீரங்கநாதர் அருள் பரிபாலித்து, அவருக்கு ஆசி கூறினார் என்றும், ஆதாரங் காட்டி, இந்த 'அருஞ்செயலில்' ஈடுபடும்படியாகக் கூறியுள்ளார்!

* * *

உயிருடன் உலவும்போது, எட்டி நில், கிட்டவராதே, இன்னாருக்குத் தான் இங்கு 'போஜனம்' உண்டு இன்னாருடைய வேலை இட்டதைச் செய்வதுதான், இடுப்பொடியப் பலக்குத் தூக்குவதுதான் என்று சனாதனம் பாடும் சங்கரர், அந்த உயிர் உடலைவிட்டுப்போன பின், சமரசம் 'தழைக்'கச் செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றிப் போதிக்கிறார்! பிரேதத்துக்குப் பூஜை, சாகும்போது சமரசம் செய்யவேண்டிய ஆசையும் அவசரமும் ஏனோ, அவருக்கு, ஏற்பட்டுள்ளது!

அனாதைப் பிணத்துக்கு ஆசாரம் செய்யவும், சாக்காட்டில் கிடப்பவருக்கு மோக்ஷ சாம்ராஜ்யத்துக்கு வழிகாட்டவும் முனைந்துவிட்டது, ஏனோ, தெரியவில்லை!

மடம் ஏற்படுத்தி, கங்கை ஜலம் வரவழைத்துக் கொடுத்துச் சாகும் நேரத்திலாவது 'சங்கரா' என்று போதித்து சன்மார்க்க நிலை வளர்க்கத் துணிந்துவிட்டாரே, அந்த ஆர்வம், எதற்கு ஏற்பட்டதோ, நமக்குப் புரியவில்லை!

மக்களிடை பேதம், பிளவு கோர தாண்டவமாடுகிறது, சாதி எனும் சாக்கடை, அங்கு தத்திக் குதிக்கும் சனாதனத் தவளைகள், நிறைந்ததாகச் சமுதாயம் நிற்கிறது. வேற்றுமை, துவேஷம், வெறுப்பு இன்னும் மறையாமல் 'வைதீகம்' எருப் போட்டு வளர்த்துக் கொண்டிருக்கிறது. சனாதனிகள் அதை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்க்கும் திருத்தொண்டில், கண்ணும் கருத்தும்கொண்டு, நிற்கிறார்கள். இந்நிலையில் 'ஜகத் குரு' சமரசம் போதிக்கிறார், செத்த உடலுக்கு, மோட்சம் அனுப்பும் 'முத்துச் சொல்' உபதேசிக்கிறார்!

'ஜீவமுக்தி'த் திருச்சேவைக்கு சிஷ்யர்கள் மூலம் கிராமங்கள் தோறும் பிரதிநிதிகளை ஏற்படுத்தச் சொல்கிறார்!! உயிர் போன பின் சாதி மத பேதம் காட்டாதே, சமத்துவமாக நினை, பிரேதத்தை அடக்கம் செய், கர்ம கைங்கரியங்களைக் கடமை தவறாது செய், அது 'சத்' காரியம் என்று போதிக்கிறார், அ[...]
காக 'கங்கை நீர்' வரவழைத்[...]
தரும் கடமையைச் செய்கி[...]
என்று 'கவலை விடு தூது' [...]
அனுப்புகிறார்!

சங்கரரின் சமரசப் போக்கு, [...]
உள்ளத்தில் நகைப்பை உண்டா[...]
கிறது, சாகும் உயிர்களிடமா[...]
தனது திருத்தொண்டைச் செ[...]
லாம், பக்திப் பிரேமையை உ[...]
டாக்கலாம் என்ற அளவுக்கு [...]
ரது 'பீடம்' சாய்ந்திருக்கி[...]
அதைக் காணும்பொழுது. 'அ[...]
ஆசை'தான், ஆனாலும், அவரு[...]
ஏற்பட்டிருக்கிறது, அப்படியா[...]
மக்கள் குறை தீர்க்கும் மகா[...]
பாவன் என்ற விருது தமக்[...]
கிடைக்காதா என்று!

* * *

வாழப் பிறந்தும், வாழ மு[...]
யாது, திண்டாடி நல்லோர்க்[...]
பொல்லனாய், எல்லோர்க்கும் கள[...]
னாய், வாழ்வுடன் போராடி, [...]
பேதம் என்ற சம்மட்டி தாக்க, [...]
தனம் என்ற ஈட்டி ஒருபுறம் கு[...]
பழைமை என்று இடி வேறு [...]
ஏழ்மையென்ற நெருப்பு [...]
பொசுக்க, இடர் மிகுந்த உ[...]
விட்டு 'இடையறா இன்பம்இறப்பு[...]
லாவது கிடைக்கும்' என்ற நம்[...]
யுடன், சாவுப் படுக்கையில் இ[...]
பவரை, 'ராமா' என்ற நாமத்[...]
ஒருமுறை சொல்லி மோக்ஷ [...]
ராஜ்யத்துக்கு அனுப்பிவைக்க [...]
யும், அது சாஸ்திரம் என்கி[...]
சங்கரர். அனாதைப் பிணத்[...]
அடக்கம் செய்ததற்காக நல்[...]
சக்கரவர்த்திக்கு ஸ்ரீ ரெங்கநா[...]
நேரில் வந்து நல்லாசி கூறி[...]
என்கிறார் — ஏதோ, தாம் [...]
கண்டவர்போல! ஒருமுறை '[...]
என்றாலே போதும், உடனே [...]
லோகத்துக்கு அனுப்பிவிடும்[...]

(2-ம் பக்கம் பார்க்க)

கடன் கேட்கிறார்

2-ம் பக்கத் தொடர்ச்சி

மைக்கவும்என்றும்பலகோடிகளைச் லவிட்டு வருகிறது! காஷ்மீரில் டைபெற்ற போரிருக்கிறதே, தற்கு ஏற்பட்ட செலவென்ன ரியுமா, 25 லட்சம் ரூபாய்கள்! ஆண்டுக்கோ, அல்லது மாதத் க்கோ ஏற்பட்ட செலவல்ல இது! நாளைக்கு—24 மணி நேரத் கு—ஏற்பட்ட செலவு, 25 லட்ச ாய்கள்!

அகிம்சை 'மகான்'கள், அதுவும் சாக சக்கரம் ஏந்தி நிற்கும் ழ பங்காளர்கள் — செய்யும் லவு இது. ஏதோ, உலகத்தின் படையெடுத்து வெற்றிகாணும் சிங்கங்கள் போல, வரும் வருமா த்தில் பாதித் தொகையை பாது பு என்ற பெயரால் செலவிடு றனர்!

இந்தப் பாதுகாப்பு, நாட்டுக்கு பதைக் காட்டிலும் இவர்கள் சிக்கு என்று சொல்வதுதான் ருந்தும்!

தங்கள் நிலையைக் காப்பாற்றிக் ள்ளும் ஆசை, போலிப் ருமை காரணமாக, ஏழை இந் தரும் வரிப்பணத்தில் பாதியை னுவத்திற்கெனச் செலவிட்டு கின்றனர். ஒரு கோடியல்ல, ண்டு கோடியல்ல, சென்னை ன்' கேட்டதே, அந்த ஏழு டி கூட அல்ல! 157 கோடி ாய்கள்!!

ாணுவம் என்ற பெயரால் நாட்டு ் பணத்தில் பாதியை 'நாசம்' ்வதோடு மட்டுமின்றி இந்த லவர்கள்' ஆட்சிப் பீடம் ஏறிய வளர்ந்திருக்கும்சிவில் நிர்வாகச் லவும் கொஞ்ச நஞ்சமல்ல.

1939-40-ல் சிவில் நிர்வாகத் கு ஆன செலவு ரூ 11 கோடி. ல் இப்போதோ என்ன தெரி ? 40 கோடி ரூபாய்கள்! படி ஏழைபங்காளர் ஆட்சி!! ழ்வுக்குத் தேவையான உணவு த்திப் பெருக்கத்துக்கு, மக்க இன்றியமையாத தேவைக்கு, லை பணம்' என்று கைவிரித் க்கிறதே, இந்திய சர்க்கார்! அது ண்டில் வெளிநாட்டுக்குத் தூது ள் என்ற பெயரால் செலவிடும் கை எவ்வளவு தெரியுமா,

அரசுப் பிரதிநிதிகள்.

வாஷிங்டன்	22,86,800
மாஸ்கோ	8,41,300
சீனு	6,80,900
எகிப்து	7,23,000
ஈரான்	6,52,100
ஆப்கானிஸ்தான்	4,54,400
பிரேஸில்	4,37,900
துருக்கி	6,71,100
பிரேக்	1,95,100
இத்தாலி	1,20,600
பர்மா	4,38,900
நேபாளம்	2,13,200
பர்ஸெல்ஸ்	3,19,800

தூதுவர்களுக்கு.

பிரேன்	4,93,700
பாங்காக்	2,47,000
ஸ்டாக்கோம்	1,31,400

ஹைகமிஷனர்கள்

லண்டன்	45,40,000
ஒட்டாவா	4,12,100
கான்பெரா	2,12,700
கொழும்பு	2,08,500
கராச்சி	5,38,100
ஜோகன்னஸ்ர்க்	1,34,200

டேபுடிஹை கமிஷனர்

லாகூர்	2,93,300
டாக்கா	1,42,800

ஒரே பிரமிப்பாயிருக்கிறதா, ஆமாம், இவ்வளவு, இலட்சக்கணக் கான ரூபாய்கள் செலவாகின்றன, 'கவுரவம்' என்ற பெயரின் மீது! வாஷிங்டனிலிருக்கும் பிரதிநிதிக்கு எவ்வளவு செலவாகிறது பார்த் தீர்களா!!

தியாகிகள், பயன்கருதாப் பர மாத்மாக்கள், என்றுபோற்றப்பட்ட, காங்கிரஸ் ஆட்சியின் நிலைஇது!

இத்தனை கோடிரூபாய்கள் செல வழிக்கும்—விரயமாக்கும்— இந்திய சர்க்கார், சென்னை மாகாணத்தின் இன்றியமையாத் தேவைக்குப் பண மில்லையென்று கைவிரிக்கிறது!

ஏன் இது, என்று கேட்கவும் வாயில்லாத பூச்சிகளான, இவர் களோ, மாகாண மக்களைத்தான் சுரண்டப் போகிறார்களாம், பணத் துக்கு.

கோபாலர் சொல்கிறார், நிலவரி மீது மேலும் 'சர்—சார்ஜ்' விதித் தும், சர்க்கார் சிப்பந்திகள் சம்பளத் தைக் குறைத்தும், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து விற்கிறார்களே விவசாயிகள், அவை களின் விலைக்குப் பணமாகக் கொடுப் பதற்குப் பதில் கடன்பத்திரங்களைக் கொடுத்தும், பணம் திரட்டப் போகிறாராம். இப்படித் திரட்டப் படும் பணம் அவரவர்களிடம் வாங் கிய கடன் என்று—கணக்கு வைத் துக் கொள்ளப்படுமாம். என்னமோ, இங்கு இருப்பவர்கள் எல்லாம்,போக போக்கியங்களில் புரண்டுகொண்டு, பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண் டிருப்பதுபோல, நினைத்துப் பேசு கிறார், இவர்! மக்களோ, உயிர் வாழக்கூட வழியில்லாமல், 'ஏனடா பிறந்தோம்' என்று கதியில்லையே; வேறு வழியில்லையே என்று கதறிக் கொண்டு கிடக்கிறார்கள்—அவர்க ளிடம் போய் கடன் கேட்கப் போகி றாராம் இந்தக் 'கனம்'!

* * *

பாதுகாப்புப் பத்திரங்கள் என்ற வகையில் மாகாணத்துக்கு 43 கோடி ரூபாய் இருக்கிறது. இந்தப் பத் திரங்களை ரிசர்வ் பாங்கிக்குவிற்றோ, அல்லது ரிசர்வ் பாங்கிடம் கடன் வாங்கியோ ஏற்பட்டுள்ள நெருக் கடியைச் சமாளிக்கலாம். ஆனால் இந்த எண்ணம் மாகாண சர்க்கா ருக்கு வரவில்லை.

ஒருவேளை, இந்த எண்ணம் எழும்பியிருந்தாலும், இதற்கும் மத்திய சர்க்காரிடம் போய்த்தானே முட்டிக்கொள்ள வேண்டும் என்ற பயம் போலும்.

ஏனென்றால், மாகாண சர்க்கார் தங்களிடமிருக்கும் பாதுகாப்புப் பத்திரங்களை (Security Bonds), மத்திய சர்க்கார் அனுமதியில்லாமல் விற்கமுடியாது. இதற்கும் மத்திய சர்க்கார் கருணை பாலித்து 'அருள்', கூர்ந்தால்தான் விற்க முடியும்.

இப்படியிருக்கிறது நிலை, மத்திய சர்க்காரிடம் தலையைக் கொடுத் திருக்கும் மாகாண சர்க்கார், அது எப்படி ஆட்டுகிறதோ, அப்படியே ஆடவேண்டிய நிலையில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறது.

கண்ணிரண்டையும்விற்றுச்சித்தி ரம்வாங்கும், பரிதாப நிலையில், அகப்

(6-ம் பக்கம் பார்க்க)

கண்மூடி மௌனியாகாதீர்!

போலீசார் லாரியில் ஏற்றுகிறார்கள்! பொதுமக்களோ அவர்கள் மீது பூக்களைச் சொரிகிறார்கள்!!

தடையுத்தரவை மீறி தகாதகாரியம் செய்தனர்—இது ஆளவந்தாரின் குற்றச்சாட்டு!

உரிமைக்குப் போராடி, உன்னத பணி புரிகிறார்கள்—இது மக்கள் மன்றம் தரும்வாழ்த்துச்சுமை!

அடாது செய்தனர், என்று அடைத்துப் பூட்டுகின்றனர் அதிகாரிகள், அதுகண்டமக்களோ, மலர் சூட்டி, வாழ்த்தி, வழியனுப்புகிறார்கள்!

நிகழ்ச்சி கடந்த 19-ந்தேதி, பம்பாயில் நடைபெற்றிருப்பது, நாம் கூறுவதல்ல, தேசியத்தினத்தாள் ‘ஹிந்து’ கூறுவது. கூட்டம், ஊர்வலங்கள், கூடாதென ஆட்சியாளர் தடைவிதித்தனர், அது கண்டு, தகாது பேச்சுரிமை பறிப்பது, மக்களுரிமை மீது ‘மண்’ போடுவது, என்று எடுத்துக்கூற, ஓயாது தடையுத்தரவு போடும் சர்க்காருக்கு ‘புத்தி’ புகட்ட, ஐம்பது பேர்கள், ஊர்வலமாகச் சென்று தடையுத்தரவை மீறியுள்ளனர்—இத்தகைய, தகுசெயல்காட்டி, மக்கள் மனநிலையை வெளிப்படுத்திய தோழர்கள்—பம்பாய் சோஷியலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

தேனும் பாலும் பெருக்கெடுத்தோடும் என்று முழக்கிய காங்கிரஸ், ஆட்சிக்கு வந்தபின் மக்களின்குறைகள் மகத்தானவையாக வளர்ந்துவிட்டன, எல்லாத் துறைகளிலும் நெருக்கடியும் நிலைமமோசமும் ஏற்பட்டுவிட்டன — ஆளவந்தார்களின் ஊழல், திறமையின்மை ஆகியவைகளின் விளைவாக.

காங்கிரஸ் ‘கனம்’களின் சுயநலமும் சொந்தச் சண்டையும், நிர்வாக ஊழலும், நாட்டுக்கு வழங்கியிருக்கும் பரிசுகள் இவை! ‘வாழ்க்கை வாழ்வதற்கே!’ என்று கூறப்படுகிறது, ஆனால் வறுமை, வாழ்வின் குரல் வளையைப் பிடித்து நெருக்குகிறது, இல்லாமை, மக்களைச் சுட்டுப் பொசுக்குகிறது.

நெருக்கடி மேல் நெருக்கடி போல, இப்போது நாடெங்கும் சர்க்கரை பஞ்சம்! பம்பாய் போன்ற இடங்களில் தீப்பெட்டி கூட கிடைக்கவில்லையாம், உப்பு கிடைப்பது அருமையாயிருக்கிறதாம்!! வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைப் பொருள்கள் இவை. எனவே, மக்கள் துயரம் மகத்தானதாக யிருக்கிறது, அவர்களின் இல்லாமை கீதம் இடியென முழங்குகிறது. இதைக் கண்டும், ஆளவந்தார், அல்லல் தீர்க்க வழி காணவில்லை, தொல்லை தீர்க்க முயற்சிக்கவில்லை.

கேளாக் காதினராக இருக்கும் அவர்களுக்கு, மக்கள் படும் அவதியை, கஷ்டத்தை, வேதனையை எடுத்துரைப்பதற்காகவே, மேற்படி தோழர்கள் ஊர்வலமாகச் சென்றுள்ளனர் அதுபோது வழி மறித்து, தடையுத்தரவை மீறினர் என்று போலீசார், பிடித்து லாரிகளில் போட்டுக் கொண்டு போயிருக்கின்றனர். ‘சர்க்கரை, உப்பு வேண்டும்!’ ‘கள்ளமார்க்கெட்டில் அவை பதுங்கிக் கிடக்கின்றன!’ ‘எடுத்துக் கொடுங்கள், இடர் தீருங்கள்!’ என்று முழக்கமிட்டுக் கொண்டு சென்ற அவர்களை, மக்கள் குறைகளை எதிரொலித்துக் கொண்டு சென்ற அவர்களை, ஆளவந்தார் பிடித்திழுத்துக் கொண்டு போவதைக் கண்ணால் கண்ட, கூடிநின்ற மக்கள் கூட்டம், அவர்கள்மீது மாலைகளை, வீசி, வாழ்த்துக் கூறி வழியனுப்பி வைத்துள்ளனர்.

பம்பாயில் இந்தச் சம்பவம் நடந்த அதே நாளில் கல்கத்தாவிலும், கம்யூனிஸ்டுகள் என்று கூறப்படும் பெண்மணிகளைக் கொண்ட ஊர்வலம் ஒன்று ‘சர்க்கரை வேண்டும்’ என்று முழக்கமிட்டுக்கொண்டு சென்றிருக்கிறது. பெண்கள் என்றும் பாராமல், அக்கூட்டத்தையும், தடியடி, கண்ணீர்ப்புகை கொ
கலைத்து விரட்டியுள்ளனர் ஆள
தார்.

இந்த இரு சம்பவங்களு
முதல் தினம் காங்கிரஸ் பிர
களே, ஊர்வலமாகச் சென்று,
கரை வேண்டும்’ என்று க
மைக் கண்டு கேட்டுள்ளனர்—
பூரில் நடைபெற்ற இந்தச் சம்ப
தில் 500-க்கு மேற்பட்ட பி
காங்கிரஸ் பிரமுகர்க
கலந்துகொண்டு, ஊர்வல
சென்று உரைத்திருக்கின்றனர்,
கள்குறைசகிக்கமுடியவில்லையெ
வீட்டு வாசற்படி விட்டும் இ
நினைக்காத “கனம்”கள்கூட, க
டர்வீடு நோக்கிப்படையெடு
அளவு நிலைமை நெருக்கடியாகி
ளது, பஞ்சம்! பஞ்சம்! என்ற
குரல் எழும்பியிருக்கிறது.

இந்தக்கேடுபாடான நிலையை
கள் குறையைத் தெரிவிக்கச் செ
வர்கள்மீது, அடக்குமுறைப்பா
தையும், தடியடிதர்பாரையும்நட
யுள்ளனர் காங்கிரஸ்ஆளவந்தா
—தடையுத்தரவை மீறிவிட்ட
குற்றஞ்சாட்டி. மக்கள் த
குறைகளைக் கூட்டமாகச் செ
கூறுவதல்லாது, எப்படித்தான்,
வேண்டுமோ, இவர்கள் ஆட்சி
நமக்குவிளங்கவில்லை! ‘இல்லை,இ
என்கிற கூக்குரல் எங்கும் ஒலி
தைக்கேட்டு, ஒருவேளை, எரி
அதிகமாகிவிட்டதன், வி

(12-ம் பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

பட்டு விழிக்கிறது. இத்திண்
டத்தைக் காணும்பொழுது, நம
உண்மையில, ‘இவர்கள்பால
தாபமே ஏற்படுகிறது!

ஏன், இந்நிலை? இருப்பதை
லாம் ‘அங்கு’ காணிக்கை செலு
விட்டு, வாழ்க்கைத் தேவை
ஏன் நாம் வாடி நிற்கவேண்டும்
கில்லையா, நம்மிடம் வகையில்

எல்லாம், இருக்கிறதே, கொள்
கொள்ளையாக!! இருந்தும்,
இந்த, கடன் வங்குவோமா எ
கலக்க நிலை! சிந்திக்கவேண்டுகி
‘பிரிவினை’ என்றால், பிதற்றுகி
என்னும் தோழர்களை!

சாவே, வா!

இருட்டே, வா!
இடியே, வருவாய்!
இன்னலே, வருக, வருக!!

ன்று அழைப்பவர்களைக் கண் ல், இந்த ஆளுக்கு என்ன, ஏதா கோளாறோ? இருட்டையும், னலையும் 'இன்பந்தர வருவாய்! னைக் காக்க வருவாய்!!' என்று ழக்கிறானே, என்று கேட்கத் ன்றும்—சாதாரணமாகஎல்லோ கும், இருட்டு இன்பந் தராது, இடர் விளைவிக்கும், இன்னல் க்க முடியாது என்பதால்.

றக்க இன்னும் கொஞ்சம் நேரம் ா இருக்கிறது, இப்போதோ, னும் சில நிமிடங்களுக்குள்ளோ, று மரணப் படுக்கையில் ஊச க் கொண்டிருப்பவன் கூட வே, வா!' என்றழைக்க மாட் ன், சாவு, சந்தோஷத்தை இழக் செய்வது, தான் வாழ்ந்து ழ்ந்த உலகை விட்டுத் தன்னை ற்றுவது என்பதால்.

காலராக் கிருமியைக் காசு டுத்து வாங்குபவர்களும், கண் த் திறந்துகொண்டே காட்டாற் குதிப்பவர்களும், இருக்கும் டை இடிக்க உத்தரவிடுபவர் ும், கதவைத் திறந்து கள்ளனே, க என்று வரவேற்பவர்களும்— தனையுடன் பேரம் பேசும் விசித் ப் பிறவிகள், வேண்டுமென்றே த்தை அழைக்கும் விபரீதப் கியினர் ஆவார்கள்.

இந்த நிலைக்கு, இந்நாட்டு காங்கி கட்சி வந்திருக்கிறது என்பதை ியும் போது நகைப்புக்குப் பதில் க்குப் பச்சாதாபம் ஏற்படுவது கிய தோஷம் போலும்!

சமீபத்தில் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக் து—ஆர். எஸ். எஸ். காரர்களை காங்கிரசில் சேர்த்துக் கொள்வ ன்று.

தட்டுங்கள்!

திறக்கப்படும்!!

று சொன்னாராம், இயேசு நாதர். ஆனால் இவர்களோ, தட்ட வேண்டியதில்லை, கதவை நாங்களே திறந்து வைக்கிறோம் என்று ஒருபடி முன்னேறியிருக்கின் றனர்.

உலக உத்தமர் காந்தியடிகளை, மதவெறி காரணமாகக் கோட்சேயும் அவனது கும்பலும் சுட்டு வீழ்த்தினர். இத்தகைய கோரச் செயலில் ஈடுபட்ட கும்பலின் கட்சியென்பவற்காக, மேலும் சதிச் செயல் ஓங்கும், என்ற பயம் காரணமாக, உடனடியாகத் தடை உத்தரவு பிறப்பித்து, யாவரையும் பாதுகாப்பில் வைத்தனர் ஆட்சியாளர்.

அவ்வளவு படுமோசமான அளவில் ஆர், எஸ். எஸ். களின் இரகசியத் திட்டங்களும், பலாத்காரச் செயல்களும், நிறைந்து கிடப்பதாக, ஒவ்வொரு மாகாண ஆளவந்தார்களாலும் கூறப்பட்டது. 'அவர்களைச் சும்மாவிடக் கூடாது' என்றெல்லாம், பேசப்பட்டது. பல இடங்களில் அவர்கள் அட்டகாசத்தையொடுக்கத் தடியடி, துப்பாக்கிப் பிரயோகங்கள்கூட நடைபெற்றன. நேரு, அவர்களை அடக்க வேண்டியதன் அவசியம்பற்றிக் கர்ஜ்ஜித்தார், பட்டேல் ஆர். எஸ். எஸ் களின் அக்கிரமங்கள்குறித்துப்பட்டியல் தந்தார், ஒவ்வொருநாளும் ஆர். எஸ். எஸ் களை அடக்கவேண்டியதன் அவசியம்பற்றிப் பேசினர்—நாடுநகர் சந்துபொந்து எங்கும்.

அவ்வளவு தூரம், வெறுக்கப்பட்ட, தூற்றப்பட்ட, அந்த ஸ்தாபனத்தினரை, வலிய அழைக்கிறார்கள், வந்துகலந்துகொள்ளுங்கள் என்கிறார்கள் காங்கிரஸ்காரியக் கமிட்டியினர் — இன்னும் காந்தியார் பெயரையேச் சொல்லித்திரியும் கனதனவான்கள்!

* * *

சாஸ்திரியார் தூது, பட்டேல் மறுப்பு, நேரு துடிப்புஎன்றெல்லாம் கூறப்பட்டுக் கடைசியில் ஆர். எஸ். எஸ். கள் திறந்துவிடப்பட்டனர் சிறையிலிருந்து. அதற்குக்காரணமாக "இனி ஆர். எஸ். எஸ். அரசியல் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாது. கலாச்சாரமேம்பாட்டுக்காகவே பாடுபடப் போகிறது" என்று கூறப்பட்டது—ஆளவந்தார்களால்! ஆனால் வெளியில் வந்தநாள்முதல் சங்கத்தலைவரான கோல்வால்கரோ, காஷ்மீரப் பிரச்னை, மொழிவாரி மாகாண சுயேச்சை ஏன், தொழில்கள் தேசிய மயமாகலாமா, ஜமீன்தாரி ஒழிப்பின் பலாபலன் ஆகியவைகளில் "கலாச்சாரத்தை"க் கண்டுவருகிறார். சிறையிலிருந்து விடுபட்டதிலிருந்து எங்கு சென்றாலும், இன்றுவரை அரசியல் பிரச்னைகள் பற்றியே பேசிவருகிறார்.

ஆர். எஸ். எஸ். களின் அந்தரங்க இலட்சியம் அகண்ட இந்துஸ்தான் என்பதும், பழிதீர்க்கும் ஆசை என்பதும், இந்து மதவெறியென்பதும், நாட்டுமக்கள் யாவரும் அறிந்ததாகும். அந்த லட்சியத்தை, மறந்து விட்டனர், ஆகவே விடுதலை செய்கிறோம் என்றனர், ஆனால் இன்றுவரை ஆர். எஸ். எஸ். தலைவர்பேசிவரும் அத்தனையும் அரசியல் பிரச்னைகளும், தங்கள் அந்தரங்க இலட்சியங்களும் பற்றியும்தான்.

இவ்வளவு வெறியும் வீண்வம்பும் கொண்ட ஆர். எஸ். எஸ்களை வருந்தியழைக்கிறது காங்கிரஸ் கட்சி 'சேரவாராய் தோழனே! சேர்ந்துழைப்போம் நண்பனே என்று!' அதுவும்—காந்தியாரின் பெயரைச் சொல்லிக்கொண்டு!!

காங்கிரசில் சேருகிறோம், கொஞ்சம் கருணை புரியுங்கள் என்று ஆர். எஸ். எஸ், கள் வேண்டுகோள் விடுத்த பின்னரோ, விருப்பம் தெரிவித்த பிறகோ, அல்ல, இந்தமுடிவு. இதுபற்றி அவர்கள் இலட்சியம் செய்யாமலிருக்கும் பொழுதே, "கதவைத் திறக்கிறோம், கண்ணாளா, கவலை விடு என் மணாளா" என்பது போல, காங்கிரசில் சேரலாம், கதவைத் திறந்துவிட்டுவிட்டோம், என்று அழைக்கின்றனர்.

'விஷத்துடன்' விளையாடுவதும், வேதனையுடன் வியாபாரம் நடத்துவதும், முடிவைத் தேடிக்கொள்ளும் பாதைகள். ஆனால், கரைந்துவரும் காங்கிரசுக்கு, இரண்டும் இன்பம் நல்கும் பாதையாகத் தோன்றுகிறது — எனவேதான், 'தங்கள்

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 23—10—49 [காஞ்சி

வியர்வை விருந்து

✲

அமைப்புமுறை என்ற வாள்!
அன்பு என்ற கேடயம்!
கண்ணியம் என்ற கவசம்!
கட்டுப்பாடு என்ற முரசம்!
கடமையாற்றுவோம் என்ற
முழக்கம்!!

இன்னபிற நற்பண்புகளை மேற்கொண்டு, 'இந்நாடு என் நாடு, இதைப் பொன்னாடாக்குவதே என் லட்சியம்' என்று எக்காளமெழுப்பி, புதுப்பாதை புகுந்து முன்னேற்ற வழிகண்டு வெற்றிபுரி நோக்கி, அடியெடுத்துவைத்து விட்டோம்.

காட்டுப்பாதை சென்று, கடமையாற்றும் நேரத்தை, கல்லிலும், முள்ளிலும் கழித்து வீண்வேட்டையாடி, வியர்வையைக் கொட்டுவது, வீணென்று கருதி, வீண்வம்பு, விதண்டாவாதம், பலப்பரீட்சை என்ற படுகுழிகளை ஒதுக்கிவிட்டு, 'பணிபுரிவதே எங்கள் ஆசை, பதறி நிற்போரே, பாதைவிடுங்கள்!' என்று அன்புமொழி பேசி முன்னேற்றக் கழகங்கண்டு முப்பது நாட்கள் நகர்ந்து விட்டன!

முப்பதே நாட்கள்! அதற்குள் நமது இலட்சியயாத்திரையின்முதல் கட்டத்தில், பூரிப்படையக்கூடிய வெற்றி மலர்ந்திருக்கிறது, கடமையாற்றும் காளைகள், செயற்கஞ்சாச் சிங்கங்கள்என்பதை இந்தஒருமாதத்தில் முகிழ்த்திருக்கும் முன்னேற்றக்கழகங்கள் எடுத்துச் சொல்லுகின்றன!

நாடு, நகர், பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர்களிலெல்லாம், நல்ல அமைப்பு முறையுடன், நல்லோர் 'வாழ்க' எனவாழ்த்த, எல்லோரும் 'பாராட்டு'ப் பகர, எழும்பியிருக்கிறது முன்னேற்றக் கழகம்.

எந்த ஒரு இயக்கத்துக்கும் ஏற்படாத—ஏற்பட முடியாத வெற்றி, திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு இந்த ஒரு மாதத்திற்குள் கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய லட்சியப் பாதையில் செல்வதற்கு எந்தவிதமான சுயநலத்தையும் கொள்ளாமல், சர்வாதிகார முறையிலிருந்து விடுபட்டு ஜனநாயக முறையை மேற்கொண்டிருப்பது தான்.

கண்மூடித்தனத்தைக்கடைப்பிடிக்காமல்,கருத்துக்குக்கண்ணியமும்காரியமாற்றக்கூடியவர்களுக்குக் கௌரவமும் கொடுக்க வேண்டுமென்ற சிறந்த பண்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சியமாகக் கொண்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும், தாம் செய்யும் தொண்டு தம்முடைய சொந்தச் சுகவாழ்வுக்கல்ல, நாட்டின் பொது நன்மைக்கே என்ற பரந்த எண்ணத்துடன் பணியாற்றுகின்றனர் என்ற பண்பினை நாட்டுக் கறிவிக்கும் நல்லமைப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்குகிறது.

தவறு, யாரால், எங்கு, எப்போது செய்யப்பட்டாலும் அதைக் கண்டிக்கவும்; தக்கது, யாரால், எங்கு, எப்போது செய்யப்பட்டாலும் அதைப் பாராட்டவும் தயங்கக்கூடாது என்ற சிறந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

தவறு செய்வோரைத் தட்டிக்கொடுத்துத் தன் சொந்த நலனுக்கு வழி தேடிக் கொள்ளும் சுயநலப் போக்கினருக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாதென்ற இலட்சியத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது.

சர்வாதிகாரமும் தன்னலமும்தலை காட்டிப் பொதுநலப் பணிக்கு முட்டுக்கட்டை போடக் கூடாதென்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் முரசொலி ஆகும்.

சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் திராவிடப் பெருங்குடி மக்கள் முன்னேற்றமடைந்து நல்வாழ்வு பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்... டன் பணியாற்ற முன்வந்திருக்கிற... திராவிட முன்னேற்றக்கழகம்.

கொள்கையை விட்டுக்கொடு... மல், குறிக்கோளை மறவாமல், மோ... தலை ஏவாமல், பகைமை பாரா... டாமல், பாதகம் செய்யாமல், நாட்... லுள்ள நல்லோர் நல்லாசி கூறி வ... வேற்கும் முறையில் திராவிடமு... னேற்றக்கழகம் அமைக்கப்பட்டிரு... கிறது.

எனவேதான், இவ்வளவுகுறை... கால அளவிலும் நிறைந்த ஆதரவு... ஒத்துழைப்பும் திராவிட முன்னே... றக்கழகத்துக்குக் கிடைக்க முடிந்... தென்பதைப் பூரிப்புடன் கூறு... றோம்! நேர்மை, நீதி, கொண்... பொதுச் சேவைக்கு நாடும்மக்களு... அளிக்கும் நற்பரிசுகள் இவை... யென்று மகிழ்கிறோம்!

இதுவரை வந்திருக்கும் இருநூ... றுக்கு மேற்பட்ட கழக ஆரம்பப்ப... டியலை, ஒருமுறை பார்த்தால், ந... உள்ளம் பூரிக்கிறது, உணர்ச்சிவழ... கிறது! பொறுப் பேற்றிருக்கும் அ... துணை தோழர்களும் நாட்டி... நரம்புகள், இசை எழுப்பும் வீ... கள், எண்ணங்களை மலர்விக்கு... சோலைகள்!

எண்ணத்தில் நன்றேக்கு, இல... சியத்தில் மட்டற்ற ஆர்வ... கொண்டு நாட்டுப்பணிக்கென... தங்களை அர்ப்பணித்துக் கொண்... ருக்கும் அத்துணை பேருக்கும் நமது... பாராட்டுதல்கள்—இதயம் பூரிக்கு... வாழ்த்துகள்.

முன்னேற்றக்கழகம் இருட்டை... நீக்கிய நிலா, காலத்தே விளை... கதிர், சோகம் போக்கிய 'அமுத... என்றுணர்ந்து 'வாழ்வு வெல்லமல்... சேவை எங்கள் லட்சியம்' என்... எண்ணற்ற இளங்காளைகள், புத்... லகம் அமைக்கும், பெரும்பொறு... புக்கு, அணிவகுக்க ஆரம்பித்துவி... டனர். நாடும், நலன் நாடும் மக்... களும், பூரித்துப் புளகாங்கிதமடை... யும் புனித நாட்கள் மலர்ந்து வி... டன! எங்கும், முன்னேற்றக்கழ... கள் முகிழ்த்து வருகின்றன!

முன்பு நமது கழகம் தே...

திராவிடநாடு

23–10–49

துளம், இப்போதோ ஓடும் அருவி! முன்பு, ஓரிடத்திலேயே பொறுப்புகள், குவிக்கப்பட்டிருந்தன. கடமைப் பணியென்ற நீர், மக்கள் என்ற கழனிக்குப் பாய முடியவில்லை. இப்போதோ, பொறுப்பு, அருவியாகிவிட்டது. கிளம்பும் இடத்திலிருந்து முடிவடையும் இடம்வரை, பொறுப்பு, சலனமற்ற நீரோட்டம் ஆகிவிட்டது. கழகத்தின் பொறுப்பு எல்லோருடையதும் ஆக்கப்பட்டு விட்டுவிட்டது — பிணைக்கப்பட்டு விட்டது. கட்சி என்ற கட்டிடம், ஒரே தூணில் நின்ற நிலை, இப்போதில்லை, அது கூடாது, அப்படியிருந்தால் ஜனநாயகக் காற்று வீசாது, தூண் அசைந்தால் என்ன ஆவது என்ற துயரம் ஏற்படும், எதிர்காலம் இருட்டாகிவிடுமே என்ற ஏக்கம் ஏற்படும்; நிலைமை இப்போதில்லை— சிருஷ்டிக்கப்படவில்லை, முன்னேற்றக் கழகத்தில். கழகத்தவர், கடமையாற்றுங் காளைகள் என்கிற லட்சக்கணக்கான தூண்களால் கழக மாளிகை கட்டப்பட்டிருக்கிறது— நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது, அமைப்பு என்ற சிமெண்ட், ஆர்வம் என்ற கற்கள் கொண்டு. ஆகவே செப் 17-ந் தேதி முகிழ்த்த முடிவும் அதன்பின் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியும் பூரிக்கக் கூடியது மட்டுமல்ல, பொறுப்பைச் சுமத்துவது, கடமையை உணர்த்துவது.

கழகம் என்றதோட்டமும் அதன் இலட்சியங்கள் என்ற மணமலர்ச் செடிகளும், செயல் வீரர்களின் கண்ணியம் என்ற தண்ணீரால், தொண்டு என்கிற எருவால், வளர வேண்டும், வளர்க்கப்பட வேண்டும் என்ற பொறுப்பும், கடமையும் த்திருக்கிறது இப்போது ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக முன்னணிப் படையினரின் பொறுப்பு, அதிகமாகி யிருக்கிறது — வளரும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் புது நிலை, அரசியல் வாழ்வில் நேர்மையையும் நீதியையும் விரும்புபவருக்கு கத்தான வெற்றியாகும், மனஞ் சளைக்காத தொண்டர்களுக்கு மதிப்பு அளிப்பதாகும். ஜனநாயகம், கட்சி அமைப்பு, விரும்பும் எவரும் க்களிப்புக் கொள்ளக் கூடியதாகும்!

* * *

பழைமை, பாசீசம், ஆகியவைகளை எதிர்த்துப் போராடும் இலட்சியப் போரில் ஈடுபட்டு நிற்கிறோம் நாம். உறுமும் வைதிகம், உதைக்க வரும் பழைமை, அடித்துத் தள்ளும் பாசீசம், வெருட்டு முனையும் மூடநம்பிக்கை, இருட்டில் தள்ளும் முதலாளித்துவம்–இவைகளை எதிர்த்தே நாம் போராடி வருகிறோம், பல்லாண்டுகளாக. நமது சமுதாயப் பணிக்கு இப்போது பலன் ஏற்பட்டு வருகிறது பெருமையும்குதூகலமும் கொள்ளத்தக்க வகையில்.

'பாபம்!'

'அடுக்காது இவர்களுக்கு!'

'முன்னோர்கள் சொல்லிவைத்ததை மோசம் என்கிறார்களே!'

"சுத்த முட்டாள்கள்"

என்றெல்லாம் நம்மைத்திட்டியவர்கள், நம்பணியைத் தூற்றியவர்கள், கடந்த சிலஆண்டுகளாக 'இவர்கள் சொல்வதிலும், இருக்கிற தப்பா, உண்மை!' என்று கூறியவண்ணம், வந்துகொண்டிருக்கிறார்கள் நம்படை வரிசைக்கு. நம்முடைய பல்லாண்டுத்தொண்டு, நாட்டிலே ஒரு மறுமலர்ச்சியை — எல்லாத்துறையிலும் உண்டாக்கியிருக்கிறது.

இன்று நம்இலட்சியங்கள், வீசும் காற்று! பரவிநிற்கும் வானம்! ஒளி வீசும் சூரியன்! நம்கழகம்பற்றிப் பேசப்படாத இடமில்லை, பட்டி தொட்டியில்லை, நாடு நகர் இல்லை! எங்கு நோக்கினும் அங்கெல்லாம் நம் கொள்கைவீரர்கள் உலவிக்கொண்டிருக்கின்றனர். கிராமத்துத் திண்ணைமேடைகள் எல்லாம் நம் பேச்சுமேடைகளாகிவிட்டன!

இந்த ஒரு மாதகாலத்தில்மட்டும் ஏற்பட்டிருக்கும் — பெயர் மாற்றப் பட்டிருக்கும்—திராவிட முன்னேற்றக்கழகங்களைக் காணும்பொழுது, இந்த உண்மை நமக்குத்திட்டமாகத் தெரிகிறது. நம்தொண்டுக்கு நல்ல எதிரொலி ஏற்பட்டிருக்கிறதே, என்று மகிழ்ச்சி மலர்கிறது!

ஆகவே, இத்தகைய புது மலர்ச்சியை, புது அமைப்புக்கொண்டுவிட்ட நாம்சேகரித்துக்காட்டவேண்டும். பரந்துகிடக்கும்கற்களைஎடுத்து சேகரித்து, ஒரு இடத்தில் கொட்டி, "பாரீர் இவ்வளவும் எங்கள் உழைப்பின்பலன் எங்கள் வியர்வை தந்த விருந்து" என்று காட்டி, பழைமைக்கும் பாசீசத்துக்கும், 'சவால்' விடுக்க வேண்டும்!

ஒருகட்சி, மக்கள் மனதிலெல்லாம் பரவியிருந்தாலும் அதன் அந்தஸ்தும் மதிப்பும், அதில்சேர்க்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களை வைத்தே மதிக்கப்பெறும்.

ஆகவே, கழகத் துவக்கவிழாவில் கலந்துகொண்டிருக்கும் தோழர்களாகிய, உங்களின் அடுத்தபணி, முன்னேற்றக்கழகத்துக்கான உறுப்பினர்களை, முறையோடு சேர்க்க வேண்டியதுதான்—சிதறிக்கிடக்கும் மாணிக்கங்களைச் சேகரித்துக்காட்ட வேண்டியதுதான்!

நாம், ஆரம்பஅசகாயசூரர்களல்ல, புயலெனக்கிளம்பி முயலெனப்பதுங்கிக்கொள்வதற்கு! நம்முடைய நாட்டுப்பணியும் "பருவக்கோழி" (Weather-Cock) அல்ல, காற்றடிக்கும் திக்கில் திசைமாறிவிடுவதற்கு! நாம், இந்நாட்டின் முடிசூடா மன்னர்கள் — ஏழையுள்ளங்களுக்காகப் போராடும் இலட்சியவீரர்கள்!

எனவே, கழகக்கொள்கைகளறிந்து, இலட்சியபுரிப் பயணத்தில் நம்தோளோடு தோள் கொடுத்து, பயணம் நடத்த நிற்கும் படைவீரர்களை, அன்பர்களை உறுப்பினர் பட்டியலில் சேருங்கள்.

பழைமை, பாசீசம் என்ற இருள் மேகங்களை விலக்கி பகுத்தறிவுக் கதிரோனைக் காணப் பாடுபடும், கண்ணியமுள்ள தோழர்களை — தோழியர்களை உறுப்பினராக்குங்கள்!

ஊருக்குழைக்கும் உத்தமர்கள் — தொழிலாளத் தோழர்களை — ஒன்று திரட்டுங்கள்! கழகத்தின் உறுப்பினர்களாக்குங்கள்!

தென்னாட்டை, திராவிடத்தை, தனி நாடாக்குவோம், என்ற இலட்சிய முணர்ந்து அதை ஆதரிக்கும் திராவிடத் தோழர்களை எல்லாம் சேருங்கள்!

இதற்கென, நாம்சிந்தும் வியர்வை, நம் கழக வளர்ச்சிக்கு நாம் தரும் விருந்து!

வியர்வை விருந்து என்றுமே வீண் போகாது! வெற்றி அளிக்கும்!!

★

பவனியில் ஒரு பாடம்

பூலோக சுவர்க்கம் என்று போற்றப் படுகிறது அமெரிக்கா. பொன் விளையும் பூமியென்றும், ஏழ்மை என்பதே இல்லையென்றும், எங்கு பார்த்தாலும் இன்பம் கொழிப்பதாகவும் கூறப்படுகிறது.

உலக நாடுகளையேவிலைக்குவாங்கக் கூடிய செல்வம் வழிந்து ஓடுவதாகவும், பரணிபாடப்படுகிறது. 'ஏழ்மை' நாடுகளை முன்னேற்ற, அவைகளின் வளர்ச்சிக்கு, பணம் தருவதாகத் திட்டங்கள் தீட்டிக்கொண்டு, நிறைவேற்றியும் வருகிறது.

இத்தகைய 'புண்ணிய பூமி'யில், இந்தியாவின் 'தவப் புதல்வர்' நேருவின் குடும்பம் பவனி வந்துகொண்டிருக்கிறது. சென்ற இடங்களிலெல்லாம் பாராட்டு, வாழ்த்துரை, பூரிக்கும் புகழ் மொழிகள், நேருவுக்கு குவிந்துகொண்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன—பத்திரிகைகள் விளம்பரப் படுத்துகின்றன. வறுமை நாட்டின் பிரதமர், ஏழ்மையின் ராஜா, 'பூலோக சுவர்க்கத்தில்' பவனி வந்துகொண்டிருக்கிறார்! அவருக்கு அளிக்கப்படும் விருதுகள், விவேகிப் பட்டங்கள், குறித்து, இங்குள்ளோர், பெருமிதமும், பூரிப்பும் கொள்கின்றனர். 'பாரும், எங்கள் நேரு பெறும் சீரைப்பாரும்!' என்று பக்கம் பக்கமாகப் பிரசுரித்து, குதூகலிக்கின்றனர், 'கோடி' பெற்றது போல் மகிழ்கின்றனர்.

பண்டித மோதிலால் நேருவின் குழந்தைகள், நேருவின் குடும்பம் அமெரிக்காவில் 'அமோகமான' வரவேற்பைப் பெற்றுத்தான் வருகின்றனர். சகோதரி விஜயலட்சுமி ஒரு பக்கம் நிற்க, இன்னொரு பக்கம் மற்றொரு சகோதரி கிருஷ்ணா ஹத்தீசிங் நிற்க, அருகில் ஆசைமகள் இந்திரா, 'பையும் கையுமாக' வர, பண்டித நேரு வரும் பவனியைப் பார்க்க ஜோராய்த் தானிருக்கிறது—படங்களில்!

ஏழ்மை நாட்டின் பாதுகாவலர், எக்களிப்புடன், அமெரிக்காவைச் சுற்றிக்கொண்டிருக்கிறார். 'ஏன், தனக்கு இவ்வளவு ஆடம்பரம் அளிக்கப்படுகிறது?' என்பதை உணரும், சக்தி உள்ளவர்தாம் பண்டிதர். ஆசியா முழுதும் சிகப்பு பரவி வரும் இந்நேரத்தில், கம்யூனிஸம் கண்டு கலங்கும், அமெரிக்க முதலாளித்துவம், 'ஆசைப் பிள்ளை'யாக இந்தியாவை ஆக்கி, அதன் மூலம் தன் பலத்தை, அதிகமாக்கிக் கொள்ள இட்டிருக்கும் திட்டம் தான் இந்த வரவேற்பும், வாழ்த்தும், என்பது அவர் இதயத்தில், வரவேற்பும் பாராட்டும் முடிந்து, ஓய்வு பெறும் நேரத்திலாவது, மின்னாமலிருக்காது.

இந்தியாவில் நேரு குடும்பம் எத்தகைய இன்பம் அனுபவிக்கிறதோ, எவ்வளவு ஆதரவு நேருவுக்கு இருக்கிறதோ, அவ்வளவு இன்பத்தையும், எக்களிப்பையும் கொண்டு கிடந்த சீனா—சியாங்-கேய் ஷேக்கை அமெரிக்க ஆதிபத்தியம் 'தத்துப் பிள்ளை போல்', ஆயுத உதவி என்ற தாலாட்டும், அளிக்கிறேன் பணம் என்ற பாலும் ஊற்றி அருமையாக வளர்த்தது—கம்யூனிசத்தை எதிர்த்து, வாகை சூடுவார் என்ற நம்பிக்கையின் காரணமாக.

ஆனால், சியாங்—கே-ஷேக்கின் கொட்டம் தரைமட்டமாக்கப்பட்டு, சீனப் பிரபுத்வத்துக்குப் புதைகுழி தோண்டப்பட்டு, பொதுவுடைமை அங்கு மலர்ந்துவிட்டது. சீனாவும்—இந்தியாவும் ஆசியாவின் இரு கண்கள், நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும், வளத்திலும். எனவே, சீனா என்ற கண் சிவப்பாகி விட்டது இனித் தன் முதலாளித்துவ கைப்பாவையாக இருக்காது என்று அமெரிக்கா, உணர்ந்து கொண்டதும், இந்தியா என்ற அடுத்த கண்ணுக்கு மையிட்டு, மகிழ்வித்து, சீராட்டிப் போற்றத் திட்டமிட்டுவிட்டது அந்த ஆசை வலையில், இந்திய முதலாளித்துவம், இந்நாட்டு சர்க்காரை, தள்ளிவிட்டுவிட்டது. ஏழைகளுக்காகப் பாடுபடுவதே எங்கள் இலட்சியம் என்று, சூளுரைத்து, போராடி, சுதந்திரம்பெற்றகாங்கிரஸ், ஆட்சிபீடம் ஏறியபின், ஏதேச்சாதிகாரப்பாதையில் வீழ்ந்து, முதலாளித்துவ மோகனப் புன்னகைக்கு இரையாகிவிட்டது. பொதுவுடைமை, சமதர்மம், என்றெல்லாம் பேசிவந்த, பண்டித நேரு போன்றோர் எல்லாம், இன்று பொதுவுடைமை என்ற சொல் கேட்டதுமே, நடுங்கும் நிலைமைக்கு வந்துவிட்டனர்—காலப் போக்கும் ஆட்சி ஆசையும், முதலாளித்துவ மோகனங்களின் கண்வீச்சும், காங்கிரஸ் ஆட்சியை, முதலாளித்துவ முகாம்களுக்குப்பாதுகாப்புத்தேடும் 'கைப்பாவை' ஆக்கி விட்டதால்.

இங்கிலைகண்ட அமெரிக்க முதலாளித்துவமோ, இந்தியா மாபெரும் நாடு, ஆசியாவின் ஜோதி, ஆகவே அது கொண்டு, கம்யூனிச வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடவேண்டும், நம் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்று திட்டமிட்டு விட்டது. அதன் விளைவுகள் தான், இந்தியாமீது என்றுமில்லா ஆசை அமெரிக்கத்தலைவர்களுக்கு இன்று ஏற்பட்டிருப்பதும், 'ஆபத்து வந்தால் காப்பாற்றுவோம்!' என்று ஆபத்பாந்தவராக ஆகியிருப்பதும் இந்தியா, கீழ்நாட்டு ஜனநாயகத்துக்கு எடுத்துக்காட்டு என்று போற்றத் துவங்கியிருப்பதும் ஆகும்.

இந்த ஆசைவலை வீச்சு, ஆபத்தானது, என்பதை, இந்திய சர்க்கார், எண்ணிப் பார்ப்பதாகக்கூடப் படவில்லை. பண்டிதர், அமெரிக்காவில், ஆங்காங்கு பேசும் போது 'இரண்டு ஆட்டில் ஊட்டும் குட்டி' என்பார்களே, அதுபோலவே, திண்டாடி, திகைத்துப்பேசுகிறார்.

ட்ரூமன் வாழும் வாஷிங்டனில் பேசும்போது, ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் இந்தியா 'சும்மா' இராது என்

உலகம் முழுமைக்குமே வக்காலத்து வாங்கிக்கொண்டு ஒரு பேச்சும், நியுயார்க்கில் பேசும்போது எந்த முகாமுடனும் இந்தியா சேராது என்பதாக, இடத்துக்கு ஒன்று, நேரத்துக்கு ஒன்றாகப் பேசிவருகிறார், ஒருபக்கம், அமெரிக்கர் காட்டும் ஆசையும் இன்னொருபக்கம் விவேகம்தரும் விளக்கமும், அவரை ஆட்டி, அலைக்கழிக்கிறது போலும்!

* * *

உலகமுழுமையும், ஒரு நாட்டின் வளம், பெருமை, வாழ்க்கை நிலை, பற்றி எவ்வளவு பெருமையாகப் பேசப்பட்டாலும் அங்கங்கும், இருப்பவன் இல்லாதவன், ஏழை — பணக்காரன், உழைப்பவன்—உண்டு கொழுப்பவன் என்ற பேதமும், சமவாழ்வற்ற தன்மையும் தாண்டவமாடிக் கொண்டுதான் உள்ளது. மனிதர் உழைப்பை மனிதர் பறிக்கும் வழக்கமும், வஞ்சகர் வாழ வாடி யுழைப்போர் வறுமையில் வாடும் நிலையும், நீடித்துக்கொண்டே இருக்கிறது.

அமெரிக்காவின் புகழ் குறித்தும், வளம் குறித்தும், வாழ்பவர்கள் அனுபவிக்கும் போக போக்கியங்கள் குறித்தும், வானமளாவப் புகழப்படுகிறது—எண்ணினாலே இனிக்கும் படியாக எல்லாம் பேசப்படுகிறது!

ஆனால், நமது பண்டித நேரு கண் முன்னாலேயே, அந்தக் கூற்றுகளில் பொதிந்து கிடக்கும், உண்மையை விளக்கும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது—அமெரிக்காவின் முதல் நகரம் என்று போற்றப்படுவதும், வானமளாவும் மாளிகைகள், வனப்பு வழியும் கூட கோபுரங்கள், நிறைந்த நியுயார்க் நகரில், நகரசபையின் சார்பில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது நேருவுக்கு. பெரிய நகரம் என்று போற்றப்படுவதும், பெருமிதத்துக்குரிய ஓ-டையர் என்பவரை மேயராகக் கொண்டதுமான, அந்நகர சபை, இந்தியப் பிரதமர் நேருக்கு வரவேற்பு வழங்க ஏற்பாடு செய்திருந்தது, அதற்கு சிறிது நேரத்துக்கு முன் அங்கு ஒரு 'ஆர்ப்பாட்டம்' நடைபெற்றிருக்கிறது. அதை, இந்தியப் பத்திரிகைகள், 'சில்லரை நிகழ்ச்சியாக'க் காட்டியுள்ளன.

நியுயார்க் — பூலோக சுவர்க்கம் என்று போற்றப்படும் அமெரிக்காவின் முதல் நகரம். எல்லோரும் இன்புற்றிருப்பதாகக் கூறப்படும் பொன்னாட்டின், புகழ்ச்சிக்குரிய பெருநகர். அங்குதான், இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது. ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் —தொழிலாளர்கள்—நகர சுத்தித் தொழிலாளர்கள்!

அவர்கள் நடத்திய அந்த மறியல், நேரு வருகிறார், தன்நாட்டு தொழிலாளர் நலன்களைப் புறக்கணித்து! அவர்கள் ஸ்தாபனங்களை அடக்கி அதன் தலைவர்களை சிறையில் பூட்டி வைத்த 'சீலர்' வருகிறார், ஆகவே, அவருக்கு 'ஏன்' இந்த வரவேற்பு, என்ற காரணத்துக்காக அல்ல— அவர்களுக்கு அதுபற்றி அறியத்தான் முடிந்ததோ, நேரம்தான் இருக்குமோ, அது வேறுவிஷயம்!

ஆனால், பொன் விளையும் 'புண்ய' பூமியின் தலைநகரின் தொழிலாளர்களாகிய அவர்கள், ஏன், அந்த மறியல், நடத்தினார்கள் தெரியுமோ,

சம்பள உயர்வு வேண்டும்!
அதிகக்கூலி வேண்டும்!!

என்பதற்காகத்தான். அதிக நேரம் வேலை செய்கிறோம், ஆனால்எங்களுக்குக்கொடுக்கப்படும் கூலியோகொஞ்சம், எங்கள் வாழ்க்கைக்குப் போதவில்லை என்று, மறியல் செய்தார்களாம்! ஆர்ப்பாட்டம் நடத்தினார்களாம்!!

“வெளிநாட்டு விருந்தாளி வருகிறார், இப்போதா இந்தமாதிரி நடந்துகொள்வது” என்று தங்கள் தலைவர்களால்கூறப்பட்டபின், அவர்கள், மறியல்விடுத்து கலைந்து சென்றனராம்.

“சிலர்மட்டும் அங்கேயே தங்கி இந்தியப்பிரதமரின் வரவேற்பு வைபவத்தைக் கண்ணாற் கண்டனராம்! என்னவோ, நடக்கப்போகிறதாமே, யாரோ வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறாராமே என்ற எண்ணத்தின்பேரில் சிலர்மட்டும் அங்கேதங்கினர்போலும்.

வாழ்வு வேதனையாக இருக்கும் பொழுது உழைத்து உலரும் அவர்களுக்கு யார் வந்தால் என்ன, யார் போனாலென்ன!' என்ற நினைப்புத் தானே இருக்கமுடியும். எனவே தான், மறியல் நடத்திய தொழிலாளர்கள், தங்கள் தலைவர்கள், நிறுத்துங்கள் .மறியலை, என்று சொன்னதும், இந்தியப்பிரதமர் வருகிறாரே, என்பதுகூட எண்ணாமல், எல்லோரும் கலைந்து சென்றனர்போலும்! இந்த நிகழ்ச்சியை “ஆர்பாட்டம் பாதியில் நின்றது. “நேருஜிக்கு நியுயார்க் தொழிலாளர் மரியாதை” என்று கொட்டை எழுத்துக்களில் நமது பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன!

* * •

ஏழ்மைமலிந்து, இன்னல்மிகுந்து இடர்மலிந்து, முன்னேற விரும்பும் நாடுகளுக்கு பணஉதவிசெய்துவரும் அமெரிக்கா இருக்கிறதே, அங்கு உழைப்பாளர் உலகம் எப்படியிருக்கிறது, என்பதற்கு, இந்த நிகழ்ச்சி நல்லதொரு எடுத்துக்காட்டு.

தன் நாட்டில், தங்களுக்காக உழைக்கும் தொழிலாளர், அதிக நேரம் உழைக்கிறோம், கூலி போதவில்லையென்று கூக்குரல் எழுப்புகின்றனர். ஆனால், அமெரிக்க அரசாங்கமோ, பிறநாடுகளின் துயர் தீர்க்கும் 'பெருமானாக' இருக்கிறேன், பணம் வேண்டுமா, படைபலம்வேண்டுமா, என்று சோலாகலம் கொள்ளுகிறது.

வீட்டு மனைவி வாட, வெளிவீடுகளுக்கு விருந்து வைத்தானாம் ஒரு வீணன், அவன் கதைபோலிருக்கிறது, அமெரிக்காவின் நிலை; தன் நாட்டு மக்கள் தவிக்கும்போது, 'தரணியைக் காப்பது எனது கடன்' என்று பரணி பாடுகிறது. வேடிக்கையான ரசிக்கக்கூடிய காட்சி, இது!

தொழிலாளர் வாடும்போது, அவர்கள் துயர் தீர்ப்பதைவிட அன்னிய நாடுகளுக்கு உதவி நல்க ஓடிவருகிறதே, அமெரிக்க சர்க்கார், அதன் இரகசியம் என்ன தெரியுமா! ஆட்டங்கொடுக்கும் முதலாளித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற சபல ஆசைதான்.

ஆட்சி பீடம் ஏறி, ஆளும்வர்க்கமாக அங்கிருப்பது, அமெரிக்க முதலாளித்துவம் ஆகவே, அது, தொழிலாளர்கள் நலனைவிட, தங்கள் வாழ்வு 'புயலில்' சிக்கிவிடாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமே என்ற பதைப்புக் காரணமாக, வளர்ந்து வரும் கம்யூனிசத்தைத் தடுக்க வேலி போடப் பார்க்கிறது, வெளி

நாடுகளைக்கொண்டு. தன் சுகபோகங்களை இழக்காமலிருக்க எதையும் ஈடு கொடுக்க, முதலாளித்துவம் தயங்குவதில்லையல்லவா! அதுதான், அமெரிக்காவின் செயலில் விளங்குவது—நமக்குப் பாடமாகக் கிடைப்பது.

தொழிலாளர் சக்தி சமுத்திர அலை, அதில் ஆடி, அசைந்து எப்போதும் தப்பிவிட முடியாது, முதலாளித்துவம் என்ற பாய்மரக் கப்பல்! இதுபொது உண்மை.

ஆனால், அமெரிக்க முதலாளித்துவமோ, தன்னாட்டு மக்களின் நலனையும் பொருட்படுத்தாது, அவர்கள் வாழ்வு வேதனையின் மீது, தங்கள் சுகமாளிகையை எழுப்பிக் கொள்வதில் முனைந்து கிடக்கிறது, முயன்று வருகிறது.

'ஜனநாயகம்' உலக சமாதானம் என்ற திரை மறைவில் தனது ஆசைகளைச் சாதிக்க, பிறநாடுகளின் முதலாளித்துவ முகாம்களையும், ஒரு முன்னணிக்கு கொண்டுவர முயற்சித்து வருகிறது. இந்த முயற்சிகளில் ஒன்றுதான் 'நேருவைப் பவனி' வர அழைத்தது! அவரும் பவனி வருவது!

நேரு பவனியால், நினைத்த பலன் கிட்டுமா, நிலைகுலையாது முதலாளித்துவம் நீடிக்க வழி பிறக்குமா, ஏழை உலகு ஒடிந்து, பொதுவுடைமையைத் தவிர்த்துவிட முடியுமா என்பதை, இனிவரும் நாட்கள் நிச்சயம் உணர்த்திவிடும், உலகம் வளர்கிறது, அதை பழமைப் பாதைக்கு உருட்டிவிட முடியாது, என்பதால்.

✻

சாவே வா!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை' எனப் போற்றிய ஒரு உத்தமர் உயிருக்கு உலைவைத்தவர்களுடன் உறவு கொள்ளத்துடிக்கின்றனர்!

இந்தத் துடிப்பும், ஆர்வமும் 'இவர்களுக்கு' இப்போது எழும்பியிருப்பதைக் காணும்போது 'சாவே, வா!' என்றழைக்கும், சங்கடமதியினனின் நினைவுதான் உண்டாகிறது நமக்கு.

ஆர். எஸ். எஸ். களோ, அகண்ட இந்து சாம்ராஜ்ய ஆசையுடையவர்கள், இந்தியாவை 'இந்துமத பூமியாக ஆக்கும் இலட்சியமுடையவர்கள், இப்படிப்பட்ட மதவெறி கொண்ட 'மகானுபாவர்களை' அழைக்கிறது — ஆவலுடன் காங்கிரஸ் காரியக் கமிட்டி கதவைத் திறந்துவைக்கிறது.

இதைக்காணும் பொழுது, காங்கிரசினுடைய உள் எண்ணம், வெளியாவது மட்டுமின்றி, காங்கிரஸ் இதுவரை கூறிவந்த வர்ணாச்சிரம தர்மம், ராமராஜ்யம் ஆகியவைகளின் மீதுள்ள ஆசையை இன்னும்விட்டு விடவில்லை, அதற்காகப் பாடுபட, 'முகாம்' அமைக்க; முன்னணி நிறுவ, முனைந்துவிட்டது, என்பது விளங்குகிறது.

சிறிது சிறிதாகக் கரைந்து வரும் கட்சி, இவ்வளவு, விரைவில், சறுக்குப் பாதையில், சாய்ந்துவிடும் என்று நாம், எதிர்பார்க்கவில்லை; ஆனால் என்ன செய்வது! சுய உருவம் என்றாவது, வெளிப்பட்டுத்தானே தீரவேண்டும்!!

காரியக் கமிட்டியின் முடிவு, காங்கிரசின் உண்மை நிலையை மட்டுமல்ல, அழிவுப்பாதையில் 'சாவே, வா!' என்றழைத்துக்கொண்டு போய் விழும், பரிதாபக் காட்சியின் கட்டத்தையும் சிருஷ்டிக்கிறது! காட்டுகிறது!!

—✻—

கண்மூடி மௌனியாகாதீர்!

6-ம் பக்கத் தொடர்ச்சி

போலும், இவர்கள் இப்படி ஆடுகிறார்கள்! எது, எப்படியிருந்தாலுஞ் சரி. குறைபோக்க வருபவர்களைக் கொடுமைக்குள்ளாக்குவதும், ஆட்சி கையிலிருப்பதால், நினைத்தபடியெல்லாம் ஆடுவதும், பேச்சுரிமைக்குத், தடைவிதிப்பதும், அடக்குமுறையால் வாழநினைப்பதும்நெடுங்காலம்நீடிக்க முடியாது.

ஆளவந்தாரின் அடக்குமுறை விரிய, விரிய பாலையாக இருக்கும் மக்கள் மனதில் வேதனைப்புயல் வீச ஆரம்பித்துவிடும். அதன் விளைவு விபரீதமானதாக இருக்கும். அதன் அறிகுறிதான், கைது செய்யப்பட்டவர்களுக்கு, பம்பாய் மக்கள் பாராட்டுபகர்ந்து மலர்மாலை சூட்டியது, வாழ்த்துக்கூறி, அனுப்பிவைத்தது.

நிலைமையை, உணரவேண்டும்,வளரும் அதிருப்தியைதெரிந்துகொள்ள வேண்டும், அடக்குமுறை பலன் தந்துவிடாது என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். • ஆளவந்தார்கள் கண்மூடி மௌனியாகவே இருப்பேன், இதற்கெல்லாம் கவலைப்பட மாட்டேன், என்றிருந்தால் எரிமலை ஒருநாள் வெடித்துவிடும்! வேதனைப் புயல் வீச ஆரம்பித்துவிடும்!!

●

பிச்சைக்காரர் தொல்லை!

பிச்சை எடுப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளவர்களும், இந்துக்களல்லாதவர்களும், பிறப்பு அல்லது இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளால் தீட்டுப்பட்டிருப்பவர்களும் கோயிலுக்குள் போகவோ அல்லது கடவுள் வழிபாடு செய்யவோ கூடாதென்று மத்திய மாகாண சர்க்கார் தடை செய்திருக்கிறது.

பிச்சை எடுப்பவர்கள் கடவுள் வாழும் இடத்துக்கு மட்டும் போகக் கூடாது, மற்ற இடங்களுக்குத் தாராளமாகப் போகலாம் என்ற முறையில் சட்டம் செய்வதைச் சாமான்யர்கள்கூட வரவேற்கமாட்டார்கள்.

பிச்சைக்காரர்கள் வேண்டுமானால் கடவுளிடத்தில் சென்று தங்கள் குறைகளை முறையிட்டுப் பிச்சை எடுக்கும் தொழிலிலிருந்து தங்களை விடுவித்து அருள் பாலிக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளலாமே தவிர, பொதுமக்களிடத்தில் சென்று பிச்சை கேட்டுத் தொல்லை கொடுக்கக் கூடாதென்று சட்டம் செய்வதையே அறிவுடையோர் வரவேற்பர். பிச்சைக்காரரால் ஏற்படும் தொல்லை நாட்டிலுள்ள மக்களுக்கேயன்றிக், கடவுளுக்கல்ல என்பதை உணரும் ஆற்றலும் அனுபவமுமுள்ள எவரும், பிச்சைக்காரர்களைக் கடவுளிடத்துக்குப் போகக்கூடாதென்று தடைசெய்ய மாட்டார்கள்.

எனவே, மத்திய மாகாண சர்க்காருக்கு உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் எவ்வளவோ இருக்கும்போது, அவசர அவசரமாக ஆண்டவனைக் காப்பாற்ற ஏன் முனைந்ததோ தெரியவில்லை.

இருப்பதையும் இழப்பதா?

★ ★ ★

"சர்க்கார் அலட்சியம் செய்கின்றது"!

"ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவதிப்படுகின்றன!"

தென்னாட்டுக் கைத்தொழிலான தீப்பெட்டி உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள கேடுபாடு குறித்து, முன்னாள் சென்னைபிரதமரான ஓமந்தூர் இராமசாமி அவர்கள் இவ்வண்ணம் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லியிலிருந்து மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் காட்டும் அலட்சியம் அதன் விளைவாக ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கேற்பட்டிருக்கும் அவலநிலை குறித்து, இதன் விளைவு ஆபத்தானது என்று எச்சரித்து அறிக்கை விட்டுள்ளார்.

நம்முடைய பாராட்டுதல் அவருக்கு, இப்போதாவது, இக்குறை தீர்க்கவேண்டுமென்று, எடுத்துக்கூற முன்வந்தார், நிலைமையை நேரில் கண்டறிந்த பின், என்பதால்.

தீப்பெட்டித் தொழில் சிதைகிறது, சீர்கெடுகிறது, காக்கத் தவறினால், கடும் வேதனை உண்டாகும், காப்பாரில்லாது பல குடும்பங்கள் கதற நேரிடும் என ஓமந்தூரார் பிரதமராக இருந்தபொழுதே, சாத்தூர் இந்திய சுதேசி சங்கத்தார் அவருக்கும் மத்திய சர்க்கார் நிதி மந்திரி ஜான் மத்தாய்க்கும் 'அபாய அறிவிப்பு' போல வேண்டுகோள் விடுத்திருந்தனர். வேண்டுகோள் விடுத்தமாதம் பிப்ரவரி; எனவே, சட்டசபைத் தேர்தல் குழப்பத்தில், பிரச்னை, கவனத்தில் நிலைக்கவில்லைப் போலும்! எனினும், பீடம்விட்டு இறங்கியபின், பொறுங்கள் எல்லாம் சரியாய்ப்போய்விடும்' என்று தொழிலாளருக்கு பொறுமை போதிக்காது, உண்மை நிலையை விளக்க முன்வந்த ஓமந்தூராரின் அறிக்கை, நேர்மையின் பாராட்டுக் குரியதே.

தென்னாட்டில், குறிப்பாகப் பாண்டிய மண்டலத்தில் பரவிவரும் முக்கிய — இன்றியமையாத கைத்தொழில் தீப்பெட்டி உற்பத்தியாகும். இந்தக் கைத்தொழிலில் கிட்டத்தட்ட 190 கைத்தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன. இவைகளில் உழைத்து ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்தும் தொழிலாளர் தொகை சற்றேக்குறைய ஐம்பதினாயிரம் எனலாம். இத்தகைய கைத்தொழில் மூலம் மத்திய சர்க்காருக்கு 1947-ல், ஓராண்டில் — மட்டும் கிடைத்த வருமானம் ஒன்றேகால் கோடி ரூபாய் ஆகும்!

* * *

1923 வது ஆண்டில் சென்னை மாகாணத்தின் பல இடங்களில் தீப்பெட்டி தயாரிக்கும் தொழில் பரவி, நாளொன்றுக்கு 40லிருந்து 50 குரோஸ் வரை தயார் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது சுமார் 190 தீப்பெட்டி செய்யும் இடங்கள் இருக்கின்றன. இப்படியேற்பட்ட வளர்ச்சி, அப்போதிருந்த அன்னிய ஆதிபத்தியம் மறைமுகமாகச் செய்துவந்த தீங்கு, அசிரத்தை மூலம் காட்டிய ஆதரவின்மை, ஆகியவைகளை மீறி, ஆங்காங்கு இருப்பவர்களால் ஏற்பட்டதாகும்.

இத்தொழில் வளர்ச்சியின் விளைவாக, இதற்கு ஆதரவான பல துணை—கைத்தொழில்களும் வளர்ந்தன. ஆயிரக்கணக்கான வேலையில்லாத் தோழர்களுக்கும் வேலைகிடைத்துப் பசிபோக்கப் பயன்பட்டது இந்த வளர்ச்சி.

ஒன்றுக்கும் உபயோகமற்றவையெனக் கருதப்பட்ட ஓலவமரம், பாலை, கம்பிளி போன்றவைகளைக் கொண்டு தீக்குச்சியாகவும், அவைகளை அடைக்கும் பெட்டிகளாகவும் தயார் செய்து தரும் உற்பத்திசாலைகள் கேரளத்தில் கிட்டத்தட்ட 60 இருக்கின்றன. இதில் மட்டும் 5000-க்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை செய்து வருகின்றனர்.

அது மட்டுமல்ல, தீப்பெட்டிக்கு 'லேபிள்'கள் தயாரிக்க வேண்டுமல்லவா, அதற்கான 'லித்தோ ஒர்க்ஸ்' பிரஸ்கள் 20-க்கு மேல் சிவகாசி முதலிய இடங்களில் ஏற்பட்டு, இவைகளில் 1000 தொழிலாளர் வரை ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் தீப்பெட்டியை ஒட்டுவதற்குரிய காகிதங்களைத் தயார் செய்யும்பொருட்டுத் திருவிதாங்கூர்—புனலூர் போன்ற இடங்களில் கழிக்கப்பட்ட காகிதம், குப்பை ஆகியவைகளைக் கொண்டு காகிதங்கள் தயாரிக்கும் 'பேப்பர் மில்ஸ்'களில் சுமார் 1500 தொழிலாளர் வரை, பணியாற்றி வருகின்றனர்.

தீக்குச்சி, தீப்பெட்டி லேபிள் தயாரிப்பு, காகித ஆலை, ஆகிய துணை—கைத்தொழில்களில் மட்டுமின்றி, வஜ்ஜிரம், பசை மாவு ஆகியவைகளை உற்பத்தி செய்யும் தொழிலிலும் குப்பம் போன்ற இடங்களில் ஏராளமான தொழிலாளர்களும் வியாபாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வளவு பலமான, ஏராளமான தொழிலாளர்களுக்கு வாழ்வு நல்கக் கூடிய, ஒரு பெரும் கைத்தொழில் ஆட்சியாளரின் கவனிப்பற்று, நிலைகுலைந்து, சீர்கெட்டு அழிந்து வருகிறது.

* * *

ஓமந்தூரார் விடுத்துள்ள அறிக்கையிலேயே ஆறு மாத காலமாக 50-க்கு மேற்பட்ட கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவென்றும், ஏனைய தொழிற்சாலைகளும், 'இன்றைக்கோ, நாளைக்கோ' என்றிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலை ஏற்படும் என்கிற 'அபாய அறிவிப்பை' அரசாங்கத்தாருக்கு கைத்தொழில் உற்பத்தியாளர்கள் ஆறு மாதங்களுக்கு முன்னரே, வேண்டுகோள், விடுத்ததன் மூலம் தெரிவித்துள்ளனர் மத்திய—மாகாண சர்க்கார்களுக்கு மட்டு

மல்ல, இரு இடங்களிலும் சட்டசபை உறுப்பினர்களாக இருக்கும் 'கனம்'களுக்கும் தெரிவித்தனர்—அறிக்கைகளை அனுப்பினர், இருந்தும், இன்றுவரை, எதுவும் செய்யப்படவில்லை, 'ஏனோ, தானோ' என்றே இருந்து வருகின்றனர்!

இந்தக் கைத்தொழில் அவ்வளவு — எதேஷ்டமான — லாபத்தைக் கொடுத்துவிடக் கூடியது மல்ல. 'உழைத்தால் உண்டு' என்ற நிலையிலிருப்பதுதான். இந்தக்கைத்தொழிலுடன், தீப்பெட்டிகளைத் தயாரிக்கும் 'பாக்டரி'கள் போட்டியிடுவதால், இதன் நிலை மோசமான அளவில் பாதிக்கப்படுகிறது. ஆங்கில ஆட்சிக் காலத்தில் "விம்கோ" போன்ற பெரிய கம்பெனிகளுக்குத்தான் சலுகையும் வசதியும் கிடைக்க முடிந்தது. இப்போதும், அது போன்ற பெரிய கம்பெனிகளுக்கே, தீப்பெட்டி ஏற்றுமதி, தேவையான பொருள்கள் கிடைத்தல், ஆகியவை கிடைக்க முடிகின்றன.

பொதுவாக இந்தியாவில் தீப்பெட்டி உற்பத்தி குறைச்சலாக இருப்பதாகவும், செய்யப்படும் உற்பத்தி போதவில்லையென்றும் கூறப்பட்டுவருகிறது. ஆனால், தென்னாட்டில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் வடநாட்டில் ஆங்காங்கு அனுப்பி வைக்கக்கூடப்போதிய வசதி சர்க்காரால் செய்து தரப்படவில்லை.

தீப்பெட்டிகளை இரயிலில் ஏற்றி வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்க உத்தரவு பெறவே ஆறுமாதங்கள் ஆகிவிடுகிறதாம்! உணவு, உடை போலத் தீப்பெட்டியையும் முக்கிய போக்குவரத்துப்பொருளாகமத்திய சர்க்காரால் கருதப்படவில்லை. ஆகவேதான், இரயில்வே நிர்வாகமும் அவர்கள் வசமிருப்பதால் ஒவ்வொரிடத்துக்கும் அனுப்பவேண்டிய அவ்வளவு அதிமுக்கியப்பொருளாக அது அவர்கள் நினைவில்படவில்லை. போக்குவரத்துப் பொருள்களில்தீப்பெட்டி "இரண்டாவதுதரத்தில்"தான் வைத்து மதிக்கப்படுகிறது. இந்நிலையில் சில்லரைவியாபாரிகளாலோ வடநாட்டில், 'மார்க்கெட்' பிடிப்பது இயலாததாகிவிடுகிறது. அதேவேளையில் பெரிய' பாக்டரிகள்' கம்பெனிகள் தங்கள் செல்வாக்கைக் கொண்டு, சுலபமாகத் தங்கள் சரக்குகள் விற்பனையாகவும் ஏற்றிக் கொண்டு போகவுமான வசதிகளைப் பெற்றுவிடுகின்றன.

அதோடுமட்டுமல்லாமல் பெரிய தொழிற்சாலைகள், தீப்பெட்டித்தயாரிப்புக்கான பொட்டாசியம்குளோரைட், தீக்குச்சிகள், அவைகளையடக்கப் பெட்டிகள் ஆகியவைகளைச் சுலபமாக, வேண்டிய அளவில், அடக்கவிலைக்குகுறைவாகத்தயாரிக்க முடிவதால், இந்த 'பாக்டரி'களில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள், சாதாரண கைத்தொழிற்சாலையில் செய்யப்படும் சரக்கைவிடக் குறைந்த விலைக்குக் கிடைக்கமுடிகிறது. எனவே, கைத் தொழிற்சாலைகளால் இந்த "பாக்டரி"களுடன் போட்டிபோட முடியவில்லை! இந்நிலையில் மத்திய சர்க்கார் வசூலிக்கும் "எக்சைஸ்" வரியோ இரண்டுக்கும் ஒரேமாதிரி—அளவுதான்!

ஆகவே, வசதியும், முதலீடும் அதிகம்கொண்ட 'பாக்டர்களின்' நிலை உயர உயரக்கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தி நசித்துவருகிறது—பயங்கரமான அளவில். பல கைத்தொழிற்சாலைகள், இதன் விளைவாகவே, முண்டி, முரண்டு,சமாளித்து கடைசியில் ஒன்றும் செய்யமுடியாமல் மூடப்படும் அளவுக்குவந்துவிடுகின்றன.

இந்நிலை இன்னும் நீடிக்குமேயானால்தீப்பெட்டிக்கைத்தொழிலிலும், அது சம்பந்தப்பட்ட ஏனைய சிறு தொழிலிலும் ஈடுபட்டு அதுவே வாழ்க்கைவழியாய்க்கொண்டு,வயிறு வளர்க்கும் அரை இலட்சம் மக்களின் நிலை பரிதாபமாக ஆகிவிடும், பட்டினி எங்கும் தாண்டவமாடத் துவங்கி, இப்போதுள்ள நிலையில் நாட்டுக்கு இன்னொரு 'வேதனை'யும் வந்துசேரும். எனவே கைத்தொழிலாளர் பிரச்னையைத் தீர்த்து ஒரு நல்லமுடிவு, பயன்தரத் தக்கவகையில் காணவேண்டியது சர்க்காருடைய பொறுப்பும், கடமையாகும். இதில் இந்திய சர்க்கார் ஏதாவது செய்யும் என எதிர்பார்ப்பதற்கில்லை—தென்னாடு, அவர்கள் கண்ணில் எப்போதுமே படுவதில்லை, பட்டாலும் கவனம் செலுத்துவதில்லை என்பதால்.

எனவே, மாகாணத்துக்கு வருவாய் தரக்கூடியதும், ஒருமண்டலத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை வழியுமான, இந்தப் பிரச்னையை ஆராய்ந்து, ஒருமுடிவுகாணமாகாண சர்க்கார் உடனடியாகத் துவங்க வேண்டியது அவசியமானது — அவசரமானது!

"குடிசைத்தொழில்வளர்ப்போம்" என்ற முழக்கத்திற்காக இல்லாவிட்டாலும், உடனடியான பிரச்னை என்பதைக் கவனத்தில் வைத்து, 50,000 பாட்டாளி மக்கள் வயிற்றில் 'பால்' வார்க்கும், ஒருபயன் படத் தக்க வகையைக் காணவேண்டும்—உடனடியாக. இதில் கவனம் செலுத்த வேண்டிய பெரும் பொறுப்பு மாகாண சர்க்காருடையதுதான்!

ஏனெனில் மாகாணத்திலிருந்து வெளி மாகாணத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் அளவில் வளரும் இந்தக் கைத்தொழில் நசித்துப் போக இடம் தந்தால், மக்கள் தொல்லை மட்டுமின்றி, மாகாணத்துக்கு வருவாய் வரும் ஒரு தொழிலும் நாசமாய்விடும்.

எனவே, மத்திய சர்க்காரை வலியுறுத்தி, ஏற்றுமதி தங்குதடையின்றிச் செல்லவும், கைத்தொழிலுக்கு ஆதரவுதரும் வகையில்கடன்கள் வழங்கியும், ஆவனசெய்யவேண்டும். அது மட்டுமின்றி, இன்று ஏற்பட்டுள்ள சிக்கலான நிலையைப் பரிசிலனை செய்து பெரிய கம்பெனிகள்—கைத்தொழிற்சாலைகள் ஆகியவைகளின் நிலை பற்றி ஆய்ந்து, சுமுகமான நிலை ஏற்படவும் செய்ய வேண்டும்.

செய்யுமா, அல்லது 'சில்லறை விஷயம்' என்று திண்டாட்டத்தை வரவழைத்துக் கொள்ளப் போகிறதா, சென்னை அரசாங்கம் என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்!

—❀—

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதார்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்

வாழப் பிறந்தவர்கள்!

மக்களாய்ப் பிறந்தார் அனை
ருமே வாழத்தான் பிறக்கிறார்கள்;
னால் எல்லோருமே 'வாழ்ந்து'
வது இல்லை! உடலுழைத்து
ருக்குலையும் விவசாயி, காலை
ழுந்து மாலை திரும்பும் தொழி
ளி, கஷ்டப்பட்டும் 'கால் வயிறு'
ம்ப வழியின்றி 'கடனாளி' ஆகித்
கைக்கும் மக்கள், இவர்கள் யாவ
மே வாழப் பிறந்தவர்கள்தான்;
னால் அவர்கள் வாழவோ வழி
லை! இந்த வேதனை உலக மூரா
ன் எதிரொலி. எங்கும் நிலவும்
ய கீதம்!

பரந்த உலகம், அதில் பிறந்த
ர்கள், தங்களைக் காப்பாற்றிக்
ள்ளக்கூட வகையற்று, வாடி,
ருவோரங்களில் 'பிணங்களாக,'
ண்டுவாரற்றுக் கிடப்பது ஒரு பக்
. இரத்தத்தை வியர்வையாக்கி,
ப்பொடிய வேலை செய்தும்,
ன் வயிறு நிரம்ப வழியில்லாது
டும் மக்கள் கூட்டம்! குழந்தை
ம்மா, பால்' என்றலற, தாய்
ய்ந்து ஒட்டிப்போன மார்பி
ருந்து பால் கிடைக்காததால்
ழும் குழந்தையைக் கண்டு,
யா, மகனே' என்று அலறுவது
பக்கம்.

ட்டு, பட்டாடை, படாடோபம்,
லாசம், ஓரிடத்தில்! ஏழ்மை,
சல், 'கதியில்லையே' என்ற கலக்கம்
பக்கம்!

* * *

இன்று என்னடி உங்காத்தில்?
, பாதாம் அல்வாதான் செய்
ன்."

இந்தச் சேலை தேவலாமா! நேத்
தான் எடுத்துண்டு வந்தார்.
பட்டாம். விலை இருநூறும்"

கமலி! இந்தக் கம்மலைப் பார்த்
யா 'சுராஜ்மல்ஸில்' வாங்கினேன்,
றைக் காரட். விலை 1500
டி!"

னிதா! வாத்தியார் வந்துடு
போ! மூஞ்சலம்பிண்டு
உட்கார். வீணையை எடு!"

"அம்மா! அப்பா எங்கேம்மா காணோம்?"

"வருவாருடா, கண்ணு! ஆண்டை வீட்டுக்கு போயிருக்காரு. இன்னைக்கி 'கூலி முறை' இல்லே!"

"அம்மா, அந்தத் தெரு சுப்பு ஏதோ தின்னுனம்மா...மைசூர் பாக்காம்! நீ, ஏம்மா எனக்கு அது போலத் தரமாட்டேங்கிறே!"

"ஏங்க! எத்தனை மாதமாச்சொல்றேன். போனபொங்கலுக்குவாங்கின சேலை இது. பாருங்க ஊசிநுழைய யாத இடமிருக்கா. ஏழு, எட்டிலே ஏதாவதொன்று வாங்கித்தர மாட்டேங்களா!"

"என்னடீ செய்வேன்......!"

* * *

ஓரிடத்தில் டிபனுக்கு அல்வா! சேலையிலே இருநூறு, வைரக்கம்மல்! வீணைப் பாட்டு!

இன்னொரிடத்தில் கஞ்சிகாணாத கந்தன், கந்தலில்லாத காத்தாயி, 'என்னடீ செய்வேன்' என்ற ஏக்கம்!

இரண்டு இடங்களில் உள்ளோரும் வாழப் பிறந்தவர்கள்தான்! ஆனால் வாழ்வு ஓரிடத்தில் வசந்தம்; இன்னொரிடத்தில் புயல்! வஞ்சகமின்றி உழைக்கிறான், அவனால் வாழ முடிவதில்லை. 'வாழ்வு' என்றால் என்ன என்று நினைக்கக்கூட முடிவதில்லை!

இன்னொரிடத்தில் உழைக்காத உல்லாசிகள், என்றாலும் வாழ்கிறார்கள், இன்பமாக, குதூகலமாக! இந்தஇரண்டு இடங்களிலும் இருப்பவர்கள் மக்கள்—வாழப்பிறந்தவர்கள்தான்! ஆனால் 'வாழ்வு' ஓரிடத்தில் மலர்கிறது, இன்னொரிடத்தில் அது வேதனையாக விரிகிறது!

இது, இன்றைய சமுதாயத்தில் நீடிக்கும்நிலை. மக்கள்யாவரும் சரிநிகர் சமானமாக வாழமுடியவில்லை, அவ்வளவு 'வக்கிர' நிலையில் வழுக்குப் பாதையாக இருக்கிறது சமுதாயம்.

வாழப்பிறந்தவர் வசிக்கும் உலகம் இருக்கிறதே, அதன் நிலைமைகளேவேறு! உழைப்பவன் எங்கோ இருப்பான், 'உப்பில்லையே' என்று அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக கவலைப்பட்டுக்கொண்டு கிடப்பான். அவன் இதயம் அழுகையில் குமுறிக்கொண்டிருக்கும் போது, அவனால் 'வாழ்பவர்கள்' சொகுசாக, சுந்தரமாக, பட்டுமெத்தையில், படுத்துறங்கிக் கொண்டிருப்பார்கள். வெயிலில் அவன்வேதனையுடன் உழைப்பான், இங்குவெயில் பொசுக்குகிறதே என்று மாளிகையிலிருந்தபடியே, விசிறி சுழன்றும், வியர்வைதாங்காது, துடித்துக் கொண்டிருப்பார்கள்!

விசித்திரமான—ஆனால் வேதனை நிரம்பியகாட்சிதான் வாழப் பிறந்தவர் உலகுக்கும் — வாழ்வுக் கிடைக்காது வேதனைப்படும் உலகுக்குமிடையே நடப்பது.

* * *

வாழப்பிறந்தவர்களாக இருப்பவர்கள் நிலையே அலாதியானது — தனிப் பாதைகொண்டது. அரசியலில் மந்திரியாக ஆகிவிடுவார்கள். பொருளாதாரத்துறையில் பெட்டியடி பெம்மானாக, ஆகிவிடுவார்கள். உழைக்காது, உடலோம்பி, உல்லாசவாசிகளாய் வெளிநாட்டுப் பிரயாணம் கிளம்பி விருது பெற்று வருவார்கள்! வாழ்வு கிடைக்காது வாடுபவர்களைப்பற்றிச் சிந்தனை, சிறிதுகூட ஏற்படுவதில்லை, அவர்களுக்கு. 'இத்தனைபேர் நம்மை நம்பி இருக்கிறார்களே! நமக்காக வாழ்கிறார்களே, அவர்களைக் கவனிக்க வேண்டியது, அவர்களையும் வாழச் செய்யவேண்டியது, நம்பொறுப்பாயிற்றே' என்ற எண்ணம் எழும்புவதுகூடக் கிடையாது. அதற்குப்பதில் அமெரிக்கா போகப் போகிறோம், அக்காவை அழைத்துச் செல்வோமா, தங்கையையும் இட்டுச்செல்வோமா, மகளும் தான் கூடவரட்டுமே என்பதிலேயே கவலையும் கருத்தும் பதிந்துகிடக்கும். அரசியல் தலைவர்களாய் — மந்திரிகளாய் — இருந்தால் கேட்கவே வேண்டியதில்லை! அக்கா, முன்னதாகவே அரசியல்தூதராக அனுப்பி வைக்கப்பட்டிருப்பார், தங்கை பிரசங்கம் செய்வதற்காகப் புறப்பட்டுப்

(அடுத்த பக்கம் பார்க்க)

வகையுண்டு! வழியில்லை!!

கடன் கேட்கிறார்!

அரங்கண்ணல்

கடன் கேட்டோம் கைவிரித்து விட்டார்கள்! என்று ஆயாசத்துடன் அறிவிக்கிறார் நமது கனம் நிதிமந்திரி கோபாலர்.

பாட்டுக்குப் பக்கமேளம் போல, மக்கள் 'கடன்' தர முன்வராவிட்டால் காகித ரூபத்திலிருக்கும் தங்கள் அபிவிருத்தித்திட்டங்களைக் கைவிட நேரிடும் என்று பயமுறுத்துகிறார் பக்தவத்சலம் — மராமத்து மந்திரி.

நீர்ப்பாசன அபிவிருத்தி போன்ற திட்டங்களை நிறைவேற்ற நிதியில்லை, நிலைமை சரிப்பட்டுவரவில்லை, ஆறு கோடி கடனைக் கொடுத்துதவுங்கள் என்று மாகாண சர்க்கார், மத்திய அரசாங்கத்தைக் கேட்டார்களாம். மத்திய சர்க்காரோ 'இல்லை' என்று கைவிரித்துவிட்டதோடு, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கெனத் தந்துவரும் ஐந்து கோடி ரூபாய் மான்யத் தொகையையும் நான்கு கோடியாகக் குறைத்து விட்டார்களாம்.

தகவலை வெளியிட்டு 'எப்படி வாழ்வேன்'? என்று முகாரி பாடியுள்ளார் நமது நிதிமந்திரியார். 'கடன் வாங்கும் கனம்' ஆகவேண்டியது தான் என்றும் ஆயாசத்துடன் தெரிவித்துள்ளார். 'சண்டைக்குப் பணம் கொடு!' என்று போர்க்காலத்தில் வசூலிக்கப்பட்டது போல, தானும் மக்களிடமிருந்து வசூலிக்கப் போவதாக அறிவித்துள்ளார். 'பார்க்கிறேன், 'பாரத புத்திரர்'களின் தேச பக்தியை' என்றும் தோள் தட்டியுள்ளார்.

மராமத்து மந்திரி பக்தவசலமோ, எத்தனை நீர்ப்பாசனத் திட்டங்களை எழுதிவைத்திருக்கிறேன், இப்போது பணம் இல்லையென்று, மத்திய சர்க்கார் கைவிரித்து விட்டனரே, என்ன செய்வேன், எங்கே செல்வேன், என்று ஒருமுறை குரலில் கலக்கத்தைக் காட்டிவிட்டு, மக்கள் இது சமயம் 'கருணை' காட்டாவிட்டால், காகித ரூபத்திலிருக்கும் திட்டங்களை, கைவிடுவது தவிர வேறு வழியில்லை என்று விசனித்துள்ளார்.

இந்தப் பரிதாப நிலையைக் காணும் பொழுது, குடுமியைக் கொடுத்து விட்டுக் குந்தி அழும் 'கோணல்'களின், நினைவு நமக்கு வருகிறது— பச்சாதாபம் ஏற்படுகிறது.

* * *

மாகாண சர்க்கார் கேட்டதோ, நீர்ப்பாசனம் போன்ற மூல செலவுகளுக்காகப் பணம் கொடுத்து உதவ வேண்டுமென்பது. ஆனால், மத்திய சர்க்காரோ இதுவும் இல்லை, இருப்பதிலும் கொஞ்சம் எடுத்துக்கொள்கிறேனென்று பதிலளித்திருக்கிறது.

இந்தியாவுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளில் உச்ச நிலையிலிருப்பது உணவுப் பிரச்னை தான். நாட்டின் உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, வெளிநாடுகளிலிருந்து கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்ய நேரிடுவதால், இந்தியாவின் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. பொருளாதார நெருக்கடியின் மூலகாரணங்கூட, உணவுப் பிரச்னை தான்! எனவே, இத்தகைய கேடுபாட்டை ஒழிக்கும் எண்ணத்துடன் 1951க்கு மேல் உணவுப் பொருள் இறக்குமதி செய்யப்படப் போவதில்லையென்று மத்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டு, அதற்குள் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய மும்முரமான முயற்சிகளில் ஈடுபடுமாறு மாகாணங்களுக்குக் கட்டளையிட்டுள்ளனர்.

உணவு உற்பத்தி பெருக வேண்டுமானால், தரிசாகக் கிடக்கும் நிலங்கள் வயல்களாக ஆக்கப்பட வேண்டியதும், அவைகளுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகள் செய்து தரப்பட வேண்டியதும் அவசியமானதாகும். எனவே, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய நீர்ப்பாசன திட்டங்களுக்கென மாகாண சர்க்கார் 13 கோடி ரூபாய்கள் திட்டமிட்டு இந்தச்செலவை மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் பகிர்ந்துகொள்ளுவதென ஏற்கனவே முடிவு செய்துள்ளனர்.

நமது மாகாணத்தில், நீர்ப்பாசன வசதியில்லாது இருக்கும் நிலம் அதிகம். கிட்டத்தட்ட 60 லட்சம் ஏக்கர் தரிசாக-பண்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்தியாவில், ஒவ்வொரு மாகாணத்திலும், எவ்வளவு நிலம் நீர்ப்பாசன வசதியுடையதாய் விதை விதைத்து அறுக்கக் கூடியதாய் இருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப்பார்த்தால், நாட்டு நன்மை

(2-ம் பக்கம் பார்க்க)

முன்பக்கத் தொடர்ச்சி

போவார், தான் 'விஷயம் அறிந்து வருவதற்காக' விஜயம் செய்வார் மகள் துணைக்கெனக் கூடச் செல்வார்

இப்படி, வாழமுடியாதவர்கள் தன்னை நம்பிக் கிடக்க, தன் வாழ் வசதி ஆகியவைகளையே கருத்தில் வைத்துச் சாதிக்கும் கனதனவான்கள்—வாழப் பிறந்த உலகத்தில்— இன்று, ஏராளமாக இருக்கின்றனர்

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்பதுதான் 'அந்த உலகின்' இலட்சியம், ஆனா

* * *

இரண்டு துருவங்களாக இன்றைய சமுதாயம் இருக்கிறது—எல்லாத் துறையிலும், வாழப்பிறந்தவர்கள், பிறந்தும் வாழமுடியாதவர்கள் என்பதாக. வாழப்பிறந்தவர்கள் வாழ்வு சோபிதமாகிக் கொண்டே போகின்றது! ஆனால், அவர்கள் வாழ்வுமாளிகையின் மாடிப்படிகளாக நிற்கும், ஏழை இதயங்களின் நிலையோ, இன்னும் படுகுழி நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலை மாறுவதென்று? இரு துருவங்கள் சந்திப்பதெப்போ

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95 Tirukkachinambi Street, Kancheepuram,